THE HON. SRI R. VENKATARAMAN : The Government consider that owing to the urgency of the matter, the discussion may take place when the Bill itself is taken up for consideration.

Grant to Aided Higher Elementary Schools

* 43 *Q.*—SRI G. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the grant payable in the case of teachers with B.A., B.T. qualification in aided higher elementary schools; and

(*b*) the basis on which the grant is fixed?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Rs. 45—2—85.

(*b*) The grant is fixed as for a secondary grade trained teacher.

SRI G. KRISHNAMOORTHY : Is it a fact that the Government have been allowing the maximum of the secondary grade scale as permissible for grant purposes in the case of middle schools where there are B.T.'s?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is my impression, Sir.

SRI G. KRISHNAMOORTHY : If that be the case, Sir, since the Government have begun to classify the higher elementary schools and middle schools as one, will they kindly consider the case of those B.T.'s who serve in higher elementary schools as persons eligible for drawing the maximum of the secondary grade scale for purposes of grant?

5th March 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : The question will have to be considered when reorganization of education comes into effect.

SRI G. KRISHNAMOORTHY : Can the Government give an assurance that when they consider the question, they will place them on the maximum of the secondary grade scale?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sorry I am not in a position to give any assurance.

Supply of common and special forms by the Central Press

*44 *Q.*—SRI T. PURUSHOTHAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any representations have been made to the Government by the Panchayat Boards about the difficulties experienced by them in the matter of supply of common and special forms by the Central Press; and

(*b*) if so, the action taken thereon by the Government?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Yes, Sir. The State Union of Panchayats at its Fifth Annual Conference held on 1st and 2nd December 1957 has passed a resolution requesting the Government that the panchayats may be permitted to print the forms required by them in co-operative presses in districts, etc., as the number of panchayats increases day by day and much delay is caused in the supply of forms by a single company.

(*b*) The matter is under the consideration of the Government.

SRI T. PURUSHOTHAM : Will the Hon. Minister kindly tell us, Sir, when the contract with the Central Press was entered into and when the contract is due to expire?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The last time when the contract was given was in the year 1955, and it is continued year after year.

SRI T. PURUSHOTHAM : Will the Government kindly consider the question of cancellation of the contract on account of the delay in complying with the orders for supply made by local bodies and panchayats?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : That is exactly what I said.

SRI V. CHAKKARAI CHETTY : What is the cause of the delay, if there is any delay at all? Is it because the Press is not able to cope with the work?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : I want notice, Sir.

[5th March 1958

SRI T. PURUSHOTHAM : Is there any reason why the work cannot be entrusted to the Government Press?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The Government Press has a lot of work. There is also an idea of expanding it. As we are not able to get the machinery from outside, it is not able to do the work. But within two years we expect to get the machinery and then the Government Press will be able to do the work.

SRI T. PURUSHOTHAM : Will the Government examine the whole question and see if private presses could not be entrusted with this work at the district level?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : That is exactly what the Government are considering. The Government are considering the basis on which this should be done. This was the request made at the conference last year and it will be considered. The Government will see how best arrangements can be made.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

II.—GOVERNMENT MOTIONS:

(1) COMMITTEE ON PRIVILEGES.

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

3–10 p.m. " That, with reference to rule 154 of the Madras Council Rules, this Council do proceed on a date to be fixed by the Hon. Chairman to elect nine members to be members of the Committee of Privileges for the financial year 1958–59."

MR. CHAIRMAN : The question is—

" That, with reference to rule 154 of the Madras Council Rules, this Council do proceed on a date to be fixed by the Hon. Chairman to elect nine members to be members of the Committee of Privileges for the financial year 1958–59."

The motion was put and carried.

MR. CHAIRMAN : I have to inform the House that, in accordance with Regulation 2 (1) framed for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix the following programme for election of nine members to the Committee of Privileges for the financial year 1958–59 :—

Time and date for the receipt of nominations	**4 p.m. on 7th March 1958.**
Time and date for the scrutiny of nominations.	**11 a.m. on 8th March 1958.**

5th March 1958] [Mr. Chairman]

Time and date for the withdrawal of nominations.	4 p.m. on 8th March 1958.
Poll, if any	Between 11 a.m. and 1 p.m. on 17th March 1958.

Nomination forms can be had from the Secretary to the Council.

(2) HOUSE COMMITTEE.

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That, with reference to rule 171 of the Madras Council Rules, this Council do proceed on a date to be fixed by the Hon. Chairman to elect six Members to be members of the House Committee for the financial year 1958–59".

MR. CHAIRMAN : The question is—

"That, with reference to rule 171 of the Madras Council Rules, this Council do proceed on a date to be fixed by the Hon. Chairman to elect six Members to be members of the House Committee for the financial year 1958–59".

The motion was put and carried.

MR. CHAIRMAN : I have to inform the House that, in accordance with Regulation 2 (1) framed for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix the following programme for election of six members to the House Committee for the financial year 1958–59 :—

Time and date for the receipt of nominations.	5 p.m. on 7th March 1958.
Time and date for the scrutiny of nominations.	12 noon on 8th March 1958.
Time and date for the withdrawal of nominations.	5 p.m. on 8th March 1958.
Poll, if any	Between 11 a.m. and 1 p.m. on 18th March 1958.

Nomination forms can be had from the Secretary to the Council.

III.—GOVERNMENT BUSINESS.

DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1958–59—*cont.*

MR. CHAIRMAN : We will now continue the discussion on the Budget. I have to inform hon. Members that twenty minutes will be allotted to each speaker. Sri A. Gajapathy Nayagar will now speak.

* SRI A. GAJAPATHY NAYAGAR : கனம் தலைவர் அவர்களே, 1958-59-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையையும் நடப்பு ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளையும் கனம் நிதி அமைச்சர் இச்சபை முன் சமர்ப்பித்திருக்கிறார். அரசாங்கத்தின் நிதி நிலை சீர்பட்டிருக்கிறது என்று அவர் தமது உரையில் சொல்லியிருக்கிறார். இரண்டாவது ஐந்தாண்டுத்

திட்ட காலத்தின் இரண்டாவது ஆண்டான இந்த ஆண்டின் வரவு செலவுத் திட்ட அறிக்கை ஒரு தனிச் சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது. அதற்கான காரணங்களை நான் சொல்கிறேன். இப்போது நம் தமிழ் நாடு நல்ல முறையில் அமைந்திருக்கிறது. தமிழ் மொழியும் சட்ட பூர்வமாக ஆட்சி மொழியாக்கப்பட்டிருக்கிறது. நமது அமைச்சரவையினரும் தமிழில் நல்லார்வம் கொண்டு, எல்லா அறிக்கைகளையும் வெளியீடுகளையும் தமிழில் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டில் பல அலுவலகங்களில் அரசாங் கத்தார் நடவடிக்கைகளைத் தமிழில் நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள். தமிழ் ஆட்சிச் சொல் அகராதியையும் வெளியிட்டிருக்கிறார்கள். இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்திருக்கும் இந்த சர்க்காரை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அன்றொரு நாள், தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தித் தமிழை சபை நடவடிக்கைகளில் அறிமுகப்படுத்துவதற்காக, தமிழில் பேச நான் ஆரம் பித்தபோது, " ' கன்வென்ஷன் ' காரணமாக—வழக்கத்தை யொட்டி— நாங்கள் அதைத் தடுக்கவில்லை " என்று சொன்னார்கள். தமிழ் நாட்டில் தமிழில் பேசுவதை யாரும் தடுக்க முடியாது. நான் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அன்று எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக, இன்று தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக இருந்து வருகிறது. தமிழ் ஆட்சி மொழியாக வந்து நல்ல இடத்தைப் பெற்றிருப்பதற்கு, தமிழ் நாடு பெரிய புண்ணியம் செய்திருக்கிறது.

இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பார்க்கும்போது, மற்றொன்று எனக்கு ஞாபகம் வருகிறது. தமிழ் மன்னர்கள் ராஜ சபையைக் கூட்டி, அங்கே வந்து அமர்ந்ததும் தங்கள் அமைச்சர்களிடம் முதலில் " நம் நாட்டில் நல்ல மழை பெய்திருக்கிறதா ? விளைச்சல் பெருகியிருக்கிறதா ? மக்கள் சுபிட்சமாக இருக்கிறார்களா ? " என்றெல்லாம் கேட்பார்கள்.

DR. A. SREENIVASAN : அது ட்ராமா.

* SRI A. GAJAPATHY NAYAGAR : கனம் அங்கத்ினர் ஸ்ரீ ஸ்ரீனிவாசனுக்கு அது ட்ராமாவாகத்தான் தோன்றும். " வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன் கோல்நோக்கி வாழும் குடி " என்ற திருக்குறளை அறியாதவர்களுக்கு அது ட்ராமாவாகத்தான் இருக்கும். மழை பெய்தால்தான் உலகம் வாழ முடியும். மழை பெய்தால்தான் மக்களுக்கு உணவு கிடைக்கும். இதை நன்குணர்ந்துதான் கனம் நிதி அமைச்சர் தமது உரையில் பருவ மழையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அதைப்பற்றிப் புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார். தென் மேற்குப் பருவ மழை சாதாரணமாகப் பெய்யும் அளவிற்கு 20 சத விகிதம் குறைவாகப் பெய்தது என்றும் அதன் காரணமாக திருச்சி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் புஞ்சைப் பயிர்கள் சரியாக விளையவில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

3-20 p.m. உணவுப் பொருள்கள் உற்பத்தியைப் பார்க்கும்போது, உணவுப் பொருள் பற்றாக்குறை குறைவாகத்தான் இருக்கிறதென்று தெரிகிறது. நமக்கு வேண்டிய உணவுப் பொருள் 48 லட்சம் டன். ஆனால் ராஜ்யத்தில் விளைந்தது 46 லட்சம் டன். ஆகவே பற்றாக்குறை 2 லட்சம் டன்தான். இதைப் பார்க்கும்போது எனக்கு ஒன்று தோன்றுகிறது. அதாவது, நாம் ஏன் கேரள ராஜ்யத்திற்கு 2 லட்சம் டன் உணவுப் பொருளை அனுப்பி விட்டு, ஆந்திராவிலிருந்து ஒரு லட்சம் டன் உணவுப் பொருளைக் கொண்டு வந்து பற்றாக்குறையை ஈடு செய்ய வேண்டும் என்று தோன்றுகிறது. இதை நான் ஒரு குற்றமாகச் சொல்லவில்லை. நம் ராஜ்ய உணவுப் பொருள் தேவையைப் பூர்த்தி செய்தபின் பிற ராஜ்யங்களுக்கு உணவுப் பொருளை அனுப்பக்கூடாதா என்றுதான் நான் கேட்கிறேன். மத்திய அரசாங்கத்தின் உத்திரவின்பேரில் இப்போதைய முறையை நாம் கடைப் பிடித்துக் கொண்டிருக்கக்கூடும். நம் ராஜ்யத்திலுள்ள மக்கள் எல் லோரும் அரிசி சாப்பிடுபவர்களாகத்தான் இருக்கிறார்கள். கோதுமையையோ மற்ற தானியங்களையோ, நம் ராஜ்ய மக்களில் சிலர் கூட உணவாக உபயோகிப்பதில்லை. ஆகவே, அரிசிப் பற்றாக்குறையை நீக்குவதற்கு நல்ல வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அரசாங்கத்தாரைக்

5th March 1958] [Sri A. Gajapathy Nayagar]

கேட்டுக்கொள்கிறேன். உணவு உற்பத்தியைப்பெருக்குவதற்காக, பொறுக்கு விதைப் பண்ணைகளையும் ரசாயன உரங்களையும் வழங்குவதற்கு வகை செய்திருப்பதற்காக அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன்.

இரண்டாவதாக, ஒரு சிறப்பான விஷயம் இருக்கிறது. "நடப்பு ஆண்டில் மிக அதிகமாகத் துண்டு விழும் என்று நாம் எதிர்பார்த்ததற்கு மாருகத் துண்டு விழாமல் போனது மட்டுமல்லாமல் வரவிருக்கும் ஆண்டில் துண்டு விழும் தொகையும் குறைந்துள்ளது" என்று கனம் அமைச்சரே தமது உரையில் குறிப்பிட்டிருக்கிருர். இதை நாம் நன்ருகக் கவனிக்க வேண்டும். நம் அரசியலார் ஒன்றும் பாடுபடுவதில்லை என்றும், சென்னை ராஜ்யம் எங்கேயோ தென்ஞட்டில் இருக்கிறதென்றும், இந்த ராஜ்ய அமைச்சர்கள் வடக்குக்குக் காவடி தூக்கிச் செல்கிருர்கள் என்றும், வடக்கேயுள்ள மத்திய அரசாங்கத்தார் தமிழ் நாட்டை கவனிப்பதில்லை என்றும் சிலர் கூறுகிருர்கள். ஆனல், மக்கள் காமுறும் காமராஜரும், மதிநலம் படைத்த நிதி அமைச்சரும் நமது மற்ற அமைச்சர்களும் டில்லி சென்று மத்திய அரசாங்கத்திடமிருந்து நல்லுதவி பெற்று வந்திருக்கிருர்கள் என்பது துண்டு விழும் தொகை குறைந்திருப்பதிலிருந்து தெரிகிறது. நேற்று ஒரு கனம் அங்கத்தினர், 'ராஜ்ய அரசாங்க குமாஸ்தாக்கள் தங்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று தெரிவித்த கோரிக்கையை இந்த அரசாங்கத்தார் நிறைவேற்றவில்லை' என்று கூறினுர். நம் அரசாங்கத்தார் அதை நிறைவேற்ற விரும்பியபோதிலும், அதை நிதிக் கமிஷனிடம் தெரிவித்து அதன் சிபாரிசைக் கோரியபோது, அதைக் கமிஷன் அங்கீகரிக்காததால்தான் அதை அரசாங்கத்தார் நிறைவேற்ற முடியவில்லை என்பது கனம் அமைச்சரின் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவ்வாறு கூறுவதற்கு நிதிக் கமிஷனுக்கு அதிகாரம் இருக்கிறது. மத்திய அரசாங்கத்தார் எல்லா ராஜ்ய அரசாங்கங்களுக்கும் அளிக்கும் நிதி உதவியின் மொத்தத் தொகை ரூ. 200 கோடி. அதில் நம் ராஜ்யத்திற்கு 18 கோடி ரூபாய்தான் கிடைத்தது என்பதும் கனம் அமைச்சரின் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கெஜட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தாவிட்டாலும், அவர்களுக்கு வேருெரு நல்ல காரியத்தை நம் அரசாங்கம் செய்திருக்கிறது. அதாவது, அந்த ஊழியர்களின் குழந்தைகளுக்கு இதுவரை மூன்ரும் படிவம் வரையில் அளித்துவந்த இலவசக் கல்விச் சலுகையை விஸ்தரித்து இப்போது ஆரும் படிவம் முடிய அளித்திருக்கிறது. இந்த இலவசக் கல்விச் சலுகையால் அந்த ஊழியர்களுக்கு எவ்வளவு லாபம் ஏற்படுகிறது என்று பார்க்க வேண்டும். சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருந்தால், ஒவ்வொரு ஊழியருக்கும் இரண்டு அல்லது மூன்று ரூபாய்தான் கிடைத்திருக்கும். ஆனல், இலவசக் கல்விச் சலுகையளித்ததன் விளைவாக, சாதாரணமாக, பள்ளி செல்லும் குழந்தைகள் உள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் பத்து ரூபாயாவது லாபம் ஏற்படும். இந்த அரசாங்கத்தார் சர்க்கார் ஊழியர்களின் குறைகளைக் கவனித்துக்கொண்டுதான் இருக்கிருர்கள். அவர்களுடைய நலன்களைப் பேணுவதற்கான எல்லாவற்றையும் அரசாங்கத்தார் தங்களால் முடிந்தவரையிலும் நிச்சயம் செய்வார்கள்.

சென்னை மாநிலம் தொழில் துறையில் பின்தங்கியிருக்கிறது. இந்த மாநிலத்தைத் தொழில் துறையில் முன்னேற்றமடையச் செய்வதற்கான முயற்சிகளை அரசாங்கத்தார் எடுத்திருக்கிருர்கள். நெய்வேலித் திட்டம் 1960-ம் ஆண்டுக்குள் முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அரசாங்கத்தார் சொல்லியிருக்கிருர்கள். நெய்வேலித் திட்டம் முடிவடைந்தவுடன் இந்த மாநிலம் தொழில் துறையில் துரிதமாக அபிவிருத்தியடையும். நெய்வேலித் திட்டத்துடன் இணைப்புத் திட்டமாக இருக்கும் மின்சார சக்தி உற்பத்தி அதிகரிப்புத் திட்டமும் நிறைவேற்றப்பட்டால் மாநிலம் செழிப்புறும் என்பதில் சந்தேகமில்லை. பெரிய தொழில்களில் பெரும் செலவு ஏற்படும். ஆனல், பெரும் தொழில் திட்டங்களுடன் இணைப்புத் திட்டங்களாக இருக்கும் சிறு தொழில் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டால், அது மிகவும் லாபகரமாக இருக்கும். சேலத்தில் கிடைக்கும் அலுமினியத்தைப் பயன்படுத்தக்கூடிய திட்டங்களும் நிறைவேற்றப்பட்டால் மாநிலம் தொழில் துறையில் கணிசமாக அபிவிருத்தியடையும்.

[Sri A. Gajapathy Nayagar] [5th March 1958

சென்னையில் தொழிற் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்றும் கனம் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். அதற்காக கனம் ஸ்ரீ வெங்கடராமன் அவர்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கவேண்டும். அங்கே தொழிற் பள்ளியும் வந்தால், தொழில்கள் நன்றாக அபிவிருத்தியடையும். இந்தத் திட்டங்கள் எல்லாம் முன்னேறிவருவதால், 1960-ம் ஆண்டுக்குப் பின்னால் நம் மாநிலம் செழிப்புறும் என்பதில் சந்தேகமில்லை.

அடுத்தபடியாக, மருத்துவத் துறையைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம் தமிழ் நாட்டிற்கேற்ற சித்த வைத்தியம் நம்மிடம் இருக்கிறது. காலக்கேடால் சித்த வைத்தியம் இதுகாறும் புறக் கணிக்கப்பட்டு வந்தது. இனிமேல் அதைப் பேணி வளர்க்கவேண்டும். ஜாம்ஷெட்பூர் ஆயுர்வேத வைத்தியத்தைப் பாதுகாத்து வளர்க்கலாம். ஹைதராபாத்தில் யூனானி வைத்திய முறையைப் பேணி வளர்க்கலாம். நம் மாநிலத்தில் சித்த வைத்திய முறையைப் பேணி வளர்க்க வேண்டும். இதற்கு ஆவன செய்யும் கனம் அமைச்சர் ஸ்ரீ மாணிக்கவேலு அவர்களை நான் பாராட்டுகிறேன்.

ஹிந்து மத அற நிலைய பரிபாலன இலாகாவைச் சேர்ந்த எவ்வளவோ நிலங்கள் சரியானபடி சாகுபடி செய்யப்படாமல் இருந்து வருகின்றன. இந்த நிலை உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தடங்கலாக இருக்கிறது. இது விஷயமாக நமது அமைச்சர் கனம் ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு நிலங்களை நல்ல வகையில் உழுது விவசாயம் செய்யப் பாடுபட்டுக்கொண்டுவருகிறார்கள். ஆனால் சொல்லிப் பயனில்லை. ஆகையால், இதற்குத் தகுந்தபடி ஒரு சட்டம் கொண்டு வந்தால்தான் நிலைமை மாறும். ஆகவே, சீக்கிரத்திலே அற நிலைய பரிபாலன இலாகாவைச் சேர்ந்த நிலங்களை சரிவர சாகுபடி செய்வதற்குத் தக்க மசோதா ஒன்று கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிற்பாடு விவசாயத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பாசன வசதி, உயர் ரக வித்துக்கள் வழங்குவது, நல்ல உரங்கள் வழங்குதல் முதலிய வசதிகளை விவசாயிகளுக்குச் செய்து கொடுத்த போதிலும், அதில் ஒரே ஒரு குறை இருக்கிறது. தன்னுடைய நன்மைக்காக எவ்வளவு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை விவசாயி தெரிந்துகொள்ளும்படி செய்யாவிட்டால், இவ்வளவு வசதிகள் வழங்கியும் அதனால் முழுப் பலன் ஏற்படாது. மக்கள் மன நிலை மாற வேண்டும். இதுதான் முக்கியம். **Man is the element.** உதாரணமாக, நமது மகன் படிப்பதற்கு வேண்டிய மேஜை, நாற்காலி, புஸ்தகங்கள் முதலியவைகளை வாங்கிக் கொடுக்கலாம். ஆனால் அவன் படிக்காவிட்டால் என்ன செய்வது ? அதனால் என்ன பிரயோஜனம் ?

DR. A. SREENIVASAN : நாம் படித்துவிடுகிறது.

*SRI A. GAJAPATHY NAYAGAR : தகப்பன் நன்றாகப் படித்தவராக இருந்துவிட்டால், அப்பொழுது " நான் ஏன் படிக்கிறது ? " என்று மகன் கேட்கிறான். நீங்கள் சொல்லித்தான் அவர்கள் அம்மாதிரிக் கேட்கிறார்களோ என்னவோ ?

DR. A. SREENIVASAN : இருக்கலாம்.

*SRI A. GAJAPATHY NAYAGAR : இப்பேர்ப்பட்ட ஆசாமிகள் இருப்பதால்தான், நம் நாடு முன்னேறவில்லை என்பதை நான் என் வாயால் சொல்ல விரும்பவில்லை. என்னை இம்மாதிரிக் கேட்டதோடு நிறுத்திக்கொண்டால் போதும். என் மகனைக் கேட்கவேண்டாம் என்று கனம் அங்கத்தினரை வேண்டிக்கொள்ளுகிறேன். எதைச் செய்தாலும் அது நன்மை பயக்கக்கூடியதாக இருக்கவேண்டும். நாட்டுப்புறத்தில் போய் விஷயம் தெரிந்தவர்கள் குறைகளைக் குற்றமாகச் சொல்லிவிட்டால், ரொம்ப நன்றாகப் பேசிவிட்டதாக நினைக்கிறார்கள். அவ்வாறு செய்வது

5th March 1958] [Sri A. Gajapathy Nayagar]

தனக்கும் கெடுதி, நாட்டிற்கும் கெடுதி. ஒவ்வொரு அங்கத்தினரும் வெளியில் ஆபீஸரைப் போய்ப் பார்க்கலாம். அவரிடம் இருக்கிற நிலையைப் பற்றிக் கேட்கலாம், சொல்லலாம். அவரும் நம்மை மதித்து வரவேற்று நாம் சொல்லுவதைக் கேட்டுக்கொள்ளுவார். அவ்விதமாக நாம் செய்தால் தான் எல்லோருக்கும் நலன் உண்டாகும்.

அடுத்தபடியாக, நமது முதல் அமைச்சர் அவர்கள் மக்களுக்கு நல்ல உணவு வழங்க வேண்டும், குடி தண்ணீர், ரோடு வசதி முதலிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தேசீய நலத் திட்டத்தில் ஈடுபட்டு அதைச் சீர்படச் செய்கிறார்கள். அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். இப்பொழுது இருக்கும் ரெவின்யூ டிபார்ட்மெண்டு வேலை எப்பொழுதும் போல் அப்படியேதான் இருக்கும். ஆனால் நாட்டிற்கு நன்மை பயக்க வேண்டுமென்றால், இவைகளையெல்லாம் தேசீய நலத் திட்டத்தோடு இணைத்துச் செய்ய வேண்டும். சில நண்பர்கள் தேசீய நலத் திட்டத்திற்காக எவ்வளவோ வீண் செலவாகிறது என்று சொல்லலாம். அப்படி வீண் செலவு செய்யப்பட்டால், அதை எடுத்துச் சொல்லுங்கள், நமது அமைச்சரிடம் சொல்லுங்கள், கலெக்டரிடம் சொல்லுங்கள். அப்படி யில்லாமல் அதிகமாகச் செலவு செய்கிறார்கள், வீண் செலவு செய்கிறார்கள் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டிருந்தால் என்ன பயன்? ஆனால் நாட்டினுடைய கவர்ன்மெண்டு எப்படி ? The people get the Government they deserve. அதை நன்றாக மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். என் நண்பர் டாக்டர் சீனிவாசனுக்கு முக்கியமாகச் சொல்லுகிறேன். அவருக்குத் தமிழ் தெரியாததால் ஆங்கிலத்தில் சொல்லுகிறேன்.

"The people get the Government they deserve. You get the Government you deserve. Do you deserve yourself? Do you deserve the community in which you were born? Do you deserve the Council in which you are sitting? Have faith in yourself and the Government. Be true to yourself. You only get the Government you deserve."

DR. A. SREENIVASAN : ஞானோதயம் ஆகிறது !

*SRI A. GAJAPATHY NAYAGAR : குற்றம் நடந்தால் அதற்கு யார் ஜவாப்தாரி ? முதலில் நான் ஜவாப்தாரி. பிறகு என் நண்பர் ஜவாப்தாரி என்பதை நன்றாக அறிய வேண்டும். ஆகவே, வீணாகக் குறை சொல்லிக்கொண்டிருந்தால், என்ன பயன் ? நல்ல படியாக யோசனை செய்து பார்க்க வேண்டும். ஒத்துழைக்க வேண்டும், மனம் மாற வேண்டும், நல் மனம் படைக்க வேண்டும். பண்புற்ற மனம் கொள்ள வேண்டும். நல்ல பேச்சுப் பேச வேண்டும். மக்களோடு கலந்து விஷயங்களை எடுத்துச் சொல்லி வேண்டிய உதவி செய்யுங்கள். நாட்டுப் புறத்தில் இருப்பவர்களுக்கு இப்பொழுது எங்கே உரம் வாங்குவது என்பது தெரியவில்லை. கணக்குப்பிள்ளை போன்ற கிராம அதிகாரிகள் பழைய குருடிகள்தான். அவர்கள் குருடிகள் என்பது அரசாங்கத்திற்குத் தெரிய வில்லை. குருடிகள் என்றால் யார் ?

DR. A. SREENIVASAN : கதவைத் திறக்க மாட்டார்கள்.

*SRI A. GAJAPATHY NAYAGAR : குருடிகள் இருக்கிற நிலையிலே இருப்பார்கள். நல்ல நிலையிலே வரமாட்டார்கள். மற்றவர்களைக் கொண்டே பிழைக்கக்கூடிய ஆசாமிகள் இவர்கள். கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் நல் மனம் படைத்து மக்களுக்கு வேண்டிய சேவையில் ஈடுபட வேண்டும். இல்லையென்றால், என்ன திட்டம் போட்டாலும், பயன் இல்லை. எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். இல்லாவிட்டால், திட்டக் கமிஷன் எவ்வளவு திட்டம் போட்டும் பிரயோசனமில்லை.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். நமது மின்சார இலாகாவிலே 20,000-க்கு மேற்பட்ட நிரந்தரத் தொழிலாளிகள் இருக்கிறார்கள். மேலும் 30,000 பேர்கள் தற்காலிகச் சிப்பந்திகளாக இருக்கிறார்கள்.

3-30 p.m. கனம் அங்கத்தினர் ஸ்ரீ குருநந்தன் ராவ் அவர்கள் சொல்லுவது போல, அவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 26, ரூ. 28 தான். அவர்களுக்குச் சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்கள் செய்யும் வேலேயோ திறமையான வேலே, டெக்னிகல் வேலே, அபாயகரமான வேலே. அவர்களுக்கு நல்ல வசதி செய்துகொடுக்க வேண்டியது நம்முடைய கடமை. மின்சாரத் திட்டங்களுக்காக நாம் அதிகப்படியாகச் செலவு செய்கிறோம். அப்படியிருக்கும்பொழுது, அந்த இலாகாவில் உள்ள ஊழியர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்து உதவ வேண்டுமென்று நமது அமைச்சர் கனம் ஸ்ரீ வெங்கடராமன் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால் தான், அந்தத் தொழிலாளர்கள் அமைதியாக வேலே செய்வார்கள். வீணுக 'ஸ்ட்ரைக்' நோட்டீஸ் கொடுக்க மாட்டார்கள். வீண் கலவரம் ஏற்படாமல் இருக்கும்.

எனது நண்பர் பேசும்போது, விவசாய வருமான வரி அவசியமில்லே என்று சொன்னுர். விவசாயத் துறையில் ஏதாவது வரி போடுவது என்றுல், அதை முன்கூட்டியே எதிர்ப்பது என்ற நிலே ஏற்பட்டு விட்டது. விவசாயம் செய்யாமல் இருப்பவர்களுக்குக்கூட நிலம் சொந்தமாக இருக்கிறது. நிலத்திலிருந்து வரக்கூடிய வருவாயைக் கொண்டே அவர்கள் பிழைக்கவில்லே. மேலும், அவர்களுக்கு உத்தியோக ஊதியம் இருக்கிறது. வீட்டிலிருந்து வாடகை கிடைக்கிறது. அதோடுகூட கொஞ்ச நிலமும் இருக்கிறது. ரூ. 3,000-க்கு மேற்பட்ட வருமானம் வரக்கூடியவர்களுக்குத்தான் விவசாய வருமான வரி விதிக்கப்படப் போகிறது. விவசாய வருவாய், ஊதிய வருவாய், வீட்டு வருவாய் எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு 'கொஞ்சம் வரி கொடுங்கள்' என்று கேட்டால், ஏன் இவர்களுக்கு மனக் கசப்பு உண்டாகிறது? கனம் நிதி அமைச்சர் இம்மாதிரிச் செய்வது சமூக நீதிக்கு ஒத்ததே என்று தமது உரையில் சொல்லியிருக்கிறுர். சமதர்ம சமுதாயம் வரவேண்டுமென்றுல், வரி கொடுத்துத்தான் ஆக வேண்டும். வரிப் பணத்தை எடுத்துக்கொண்டு எங்கே போகிறுர்கள்? வரி போட்டால்தானே, செலவு செய்யலாம், மக்களுக்கு வேண்டிய நன்மைகளேச் செய்யலாம். அதிகத் துண்டு விழாமல் இருப்பதற்காக நிதிக் கமிஷனேடு போராடி பணம் சேமித்துத் துண்டு விழுவதைக் குறைத்திருக்கிறுர்கள். மேற்கொண்டு செலவு செய்தால்தான் நாட்டிற்குப் பலன் உண்டாகும் என்ற கருத்துக்கொண்டு, மூன்று, நான்கு இனங்களில் மட்டும் வரி விதித்திருக்கிறுர்கள். (ஒரு குரல்: வருஷா வருஷம்.)

டீசல் எண்ணெய் மீது வரி விகிதத்தை உயர்த்தியிருக்கிறுர்கள். எந்த வரி போட்டாலும் நாம் எதிர்த்துப் போராட வேண்டுமென்பது அவசியமில்லே. உதாரணமாக நான் சொல்லுகிறேன். என் வீட்டில் ஒரு கொட்டகை போடுவதற்கு 30 மைல் தூரத்திலுள்ள செங்கல்பட்டிலிருந்து ஒரு லாரியில் விழல் கொண்டு வந்தேன். அதற்கு நான் லாரிக் கட்டணம் ரூ. 50 கொடுக்க வேண்டியிருந்தது.

DR. A. SREENIVASAN: தாங்கக்கூடிய கை என்று கேட்டிருப்பான்.

* SRI A. GAJAPATHY NAYAGAR: அடுத்ததாக, பொழுது போக்கு வரியைப்பற்றிக் கூறுகிறேன். ஒரே சினிமாவை ஆறு தடவைகள் பார்க்கிறுன் ஒருவன். ஒரு நாளில் பகலில் ஒன்று, மத்தியானத்தில் ஒன்று, இரவில் ஒன்று ஆக மூன்று காட்சிகள் பார்க்கிறுன். இப்படி வீண் செலவு செய்கிறவன் அதற்குமேல் இரண்டு அணு வரி ஏன் கொடுக்கக் கூடாது? அப்படியும் பணம் எங்கே போகிறது? மக்களுடைய நன்மைக்காகத் தானே செலவு செய்யப்படுகிறது.

இம்மாதிரி ஒரு அருமையான வரவு செலவுத் திட்டத்தை—யாருக்கும் தொல்லே இல்லே, யாருக்கும் துன்பம் இல்லே, யாருக்கும் எவ்விதத்திலும் கஷ்டம் இல்லே—நாம் எல்லோரும் வரவேற்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, இதுகாறும் பேச அவகாசம் கொடுத்த சபைத் தலேவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

5th March 1958]

*Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் ஆதரிக்கிறேன். இந்த வரவு செலவுத் திட்டம் ஓரளவு உபரித் திட்டமாக அமைந்திருக்கிறது. அதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இதை உபரி பட்ஜெட்டாக ஆக்குவதற்காக அரசாங்கத்தார் சில புதிய வரிகளை விதித்திருக்கிறார்கள். அவைகளுள் விவசாய வருமான வரி மிகவும் குறிப்பிடத்தக்கது. ஏற்கெனவே தோட்டச் சொத்துக்களுக்கு விவசாய வருமான வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அரசாங்கத்தார் மற்ற எல்லா நிலச் சொத்துக்கள் மீதும் விவசாய வருமான வரி விதித்திருக்கிறார்கள். ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு மேற்பட்ட வருமானமுடையவர்களின் தோட்ட வருமானத்திற்கு அந்த வரி விதிக்கப்பட்டது. ஆனால், இப்போது விதிக்கும் விவசாய வருமான வரியைப் பொறுத்த வரையில், அரசாங்கத்தார் 3,000 ரூபாய்க்கு உட்பட்ட வருமானமுடையவர்களின் நில வருமானத்திற்கு விதி விலக்கு அளிக்கிறார்கள். விவசாய வருமான வரி விதிக்கப்பட வேண்டுமென்ற அபிப்பிராயம் நீண்ட காலமாகவே இருந்து வந்திருக்கிறது. விவசாயிகளுக்கு வரக்கூடிய வருமானத்தையும் அவர்களுடைய உழைப்பையும் பார்க்கும்போது, இந்த வரி விதிப்பு அவர்களை மிகவும் பாதிக்கும் என்று நான் நினைக்கிறேன். விவசாயம் சுலபமான தொழில் அல்ல. விவசாயத் தொழிலில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. மலைத் தோட்டங்கள் பெரிய தொழிற்சாலைகளைப் போன்றவை. ஆகவே, மலைத் தோட்ட முதலாளிகள் கணக்குகளை வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்கள் வைத்துக்கொண்டிருக்கும் கணக்குகளைப் பார்த்து எளிதில் வரி விதிக்கலாம். ஆனால், சாதாரண விவசாயிகள் பலவகைப் பயிர்கள் பயிர் செய்யவேண்டியிருக்கிறது. அவர்கள் கணக்குகள் வைத்துக்கொள்வதேயில்லை. அவர்கள் கணக்குகள் வைத்துக் கொள்வதும் கஷ்டம். ஆகவே, விவசாய வருமான வரி விதிப்பது மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கும். என்னைப் போன்ற பெரிய விவசாயிகளே விவசாயம் சம்பந்தமாகக் கணக்குகள் வைத்துக்கொள்ளமுடிவதில்லை. இந்த நிலையில், ரூ. 3,000-க்கு மேற்பட்ட வருமானம் உடைய விவசாயிகளுக்கு விவசாய வருமான வரி உண்டு என்று நிர்ணயித்தாலும் எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்படும். விவசாயிகளுக்கு ஏற்கெனவே பல தொல்லைகள் இருக்கின்றன. அவைகளுடன் வரி வசூலிக்கும் அதிகாரிகளின் தொல்லைகளும் இந்த வரி விதிப்பால் ஏற்படும் என்றுதான் நான் நினைக்கிறேன். மேலும், உதாரணமாக, ரூ. 5,000-க்கு மேற்பட்ட வருமானம் உடையவர்கள் ரூபாய்க்கு 5 நயா பைசா வீதம் வரி செலுத்த வேண்டியிருக்கும். 10,000 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் பெறுபவர்கள் ரூபாய்க்கு 10 நயா பைசா வீதம் வரி செலுத்த வேண்டியிருக்கும். இரண்டு அணு என்று கணக்குக்குத் தோதாக இருப்பதற்காக 10 நயா பைசா என்பது 12 நயா பைசாவாக உயர்த்தப்படக்கூடும். அப்படியே கணக்குப் பார்க்கும்போது 25,000 ரூபாய்க்கு மேற்பட்டு வருமானம் பெறுபவர்கள் ரூபாய்க்கு 6 அணு வீதம் விவசாய வருமான வரி செலுத்த வேண்டியிருக்கும். இந்த வரியின் மூலம் அரசாங்கத்திற்குக் கணிசமான வருவாய் வராது என்றும் தெரிகிறது. பட்ஜெட்டில் துண்டு விழும் தொகையான 1 கோடியே 5 லட்சம் ரூபாய்க்கும் குறைவாகத்தான் இந்த வரியின் மூலம் பணம் கிடைக்கும் என்று தெரிகிறது. அப்படியிருக்கும்போது, இந்த வரியை ஏன் போட வேண்டும்? இப்போது விவசாயிகளுக்குப் பல தொல்லைகள் இருக்கின்றன. உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று ஒரு பக்கத்தில் சொல்கிறோம். குடும்பக் கட்டுப்பாடு என்று சொல்லி குழந்தைகளை அதிகம் பெறக்கூடாது என்று மற்றொரு பக்கத்தில் சொல்லிக்கொண்டிருக்கிறோம். எது அதிகரிக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அது குறைந்துகொண்டே போகிறது. எது வேண்டாமென்று சொல்கிறோமோ, அது நிறைய உற்பத்தி ஆகிக்கொண்டேயிருக்கிறது. இந்த நிலையில் உணவு உற்பத்தியைப் பெருக்கத்தான் வேண்டும். இந்த நிலையில் விவசாயிகளுக்கு விவசாய வருமான வரி விதித்தால், அவர்களுக்கு விவசாயத்தில் உற்சாகம் குறைந்து போகும். அதனால் உணவுப் பொருள் உற்பத்தி பாதிக்கப்படும்.

உணவுப் பொருள் உற்பத்தி பெருக வேண்டுமென்பதற்காக, அரசாங்கத்தார் விவசாயிகளுக்குப் பல உதவிகளை அளிக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பொறுக்கு விதைகள், ரசாயன உரங்கள் முதலியவை கிடைப்பதற்கு

[Sri N. Nallasenapathi Sarkarai Manradiar] [5th March 1958

சர்க்கார் வகை செய்திருக்கிருர்கள். இந்த சந்தர்ப்பத்தில், இன்னென்றையும் கவனிக்க வேண்டும். இப்போது டீஸல் எண்ணெயின் மீது வரி விதிக்கப் போகிருர்கள். இந்த வரி விதிப்பு விவசாய அபிவிருத்தியைப் பாதிக்காத முறையில் இருக்க வேண்டும். இப்போது எத்தனையோ கிராமங்களில் விவசாயிகள் விவசாயக் காரியங்களுக்காக மின்சார மோட்டார்களை உபயோகித்து வருகிருர்கள். அந்த மோட்டார்களை அடிக்கடி ஏற்படும் மின்சார கரண்ட் கட்டுப்பாடு காரணமாக, பூரணமாக உபயோகப்படுத்த முடிவதில்லை. ஆகவே, என்னைப் போன்றவர்கள், ஒரு கிணற்றுடன் மின்சார
3-40 p.m. மோட்டார் இணைக்கப்பட்டிருந்தால், அங்கே ஒரு ஆயில் எஞ்ஜினையும் வைத்துக் கொண்டிருக்கிருேம். மின்சார கரண்ட் கொடுக்கப்படாத நேரத்தில் ஆயில் எஞ்சினைப் பயன்படுத்தி வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியும். மின்சாரக் கரண்ட் கட்டுப்பாடு காரணமாக, மின்சார கரண்ட் இரவு நேரங்களில் கொடுக்கப்படுகிறது. இரவு நேரங்களில், நஞ்சை நிலங்களுக்குச் சுலபமாகத் தண்ணீர் பாய்ச்சலாம். ஆனல், பருத்தி, புகையிலை போன்ற புஞ்சைப் பயிர்கள் இருக்கும் நிலங்களுக்கு இரவு நேரத்தில் தண்ணீர் பாய்ச்சுவது கஷ்டமானது. இரவில் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும்போது, விவசாயக் குடும்பத்திலுள்ள எல்லோரும் சேர்ந்து—புருஷன், மனைவி, குழந்தைகள் ஆகிய எல்லோரும் சேர்ந்து—தண்ணீர் பாய்ச்சவேண்டியிருக்கிறது. இரவு நேரத்தில் நிலங்களில் நடமாடுவது அபாயகரமானது. சமீபத்தில், எனது ஊரில் இரவு நேரத்தில் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்த ஒரு பெண்மணி பாம்பால் தீண்டப்பட்டு இறந்தாள். ஆகவே, இரவு நேரங்களில் மின்சார மோட்டாருக்குக் கரெண்ட் கிடைக்கும் இடங்களில் ஆயில் எஞ்ஜின்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. டீஸல் எண்ணெயின் மீது விதிக்கப்பட்டுள்ள வரி விவசாயிகளைப் பாதிக்கக் கூடும். விவசாயிகளுக்கு அரசாங்கத்தார் கடன்கள் கொடுக்கிருர்கள். அந்தக் கடன்களைப் பெற்று விவசாயிகள் டிராக்டர்களும் மின்சார மோட்டார்களும் வாங்குகிருர்கள். இப்போது விவசாயிகள் பலர் டீஸல் எஞ்ஜின்களை வைத்துக்கொண்டிருக்கிருர்கள். அவர்களை டீஸல் எண்ணெய் வரி மிகவும் பாதிக்கும். விவசாயி பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டால், விவசாயப் பொருள் உற்பத்தி பெருகாது. விவசாயியின் வருமானமும் குறையும். "உழவன் கணக்குப் பார்த்தால் அவனுக்கு மிஞ்சியது உழக்கோல்" என்று சொல்வதுண்டு. உழக்கோல் என்பது, மாட்டைக்கொண்டு நிலத்தை உழும்போது மாடு சோம்பேறித்தனமாக இருந்தால் அதை சுறுசுறுப்படையும்படி தூண்டுவதற்காக உழவனல் உபயோகிக்கப்படும் கம்பு ஆகும். அந்தக் கம்பின் நுனியில் ஒரு சிறு ஆணி பொருத்தப்பட்டிருக்கும். இப்படிப்பட்ட வரிகளை விதித்தால், உழவனுக்கு உழக்கோலும் மிச்சமாகாத நிலை ஏற்படக் கூடும். இன்று நாம் விவசாயத்தில் பல துறைகளிலும் முன்னேற வேண்டியிருக்கிறது. உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்கி, நாட்டில் சுபிட்சத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நாம் விரும்பும் இந்தக் காலத்தில், இந்த விவசாய வருமான வரியை நன்ருக யோசித்து விதிக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடை வளர்ப்பு சம்பந்தமாகப் பல துறைகளில் சர்க்கார் உற்சாகம் கொடுத்திருக்கிருர்கள். பல சிறிய கிராமங்களில் விஸ்தரிப்புத் திட்டம் ஏற்படுத்தியிருக்கிருர்கள். இது வரவேற்க வேண்டிய சந்தோஷமான விஷயம்தான். என்னைப்போல வருமானம் உள்ளவரைப் பற்றிச் சொல்ல வேண்டுமானல், என்னைப் போல உள்ளவர்கள் கால்நடை விற்பனைக்குக்கூட ஏற்கனவே விற்பனைவரி கொடுத்துக்கொண்டிருக்கிருர்கள். எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும், எல்லாவித விவசாயிகளையும் விவசாய வருமான வரி மிகவும் பாதிக்கும் என்று நினைக்கிறேன். மொத்தத்திலே கணக்குப் பார்த்தால், விவசாயத் துறையிலேயே இருக்கின்றவர்களுக்கு பயம் தான் ஏற்படுகிறது. இந்த வரி விதிப்பது விவசாயத் துறையிலே எந்தவிதமான உற்சாகத்தையும் கொடுக்காது என்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

மற்றும், நண்பர் ஸ்ரீ ஏ. கஜபதி நாயகர் ஏதோ மணியக்காரர், கணக்குப் பிள்ளை என்று சொல்லி அப்படியே முடிக்காமல் விட்டுவிட்டார். மணியக்காரர், கணக்குப்பிள்ளை கஷ்டப்படுவதை விட யாரும் கஷ்டப்

படுவதில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். மற்ற ஆபீஸ் வேலை வேண்டுமானால் சுலபமாக இருக்கலாம். நமக்கு ஏதாவது இங்கே விஷயம் தெரிய வேண்டுமானால், மணியக்காரர், கணக்குப்பிள்ளைக்கு அனுப்பப் பட்டு, அவர்கள் கொடுக்கும் கணக்கை வைத்துத்தான் நமக்குச் சொல்லக் கூடிய பதில் வரும். இந்த நிலைமையைக் கொஞ்சம் கூட நண்பர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இருந்தாலும் சர்க்கார் சமீபத்தில் ஏழு மாதத்திற்கு முன்பாக அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்குக் கொஞ்சம் உதவி செய்தார்கள். அதை நான் பாராட்டுகிறேன். நான் மணியக்காரர் என்ற முறையில் பேசுகிறேன். அவர்களுடைய உழைப்பு ரொம்பவும் அவசியமானது. கிராமத்திலுள்ள மக்கள் மீது வரியைப் போட்டு விட்டால், அவர்கள் தலைதான் சொட்டையாகப் போகிறது. கணக்கு எழுதிவிட்டால், கிராமத்திலுள்ளவர்களோடு சண்டை. கணக்கு எழுதாவிட்டால், ரெவின்யூ இன்ஸ்பெக்டரின் கோபத்துக்கு உள்ளாக வேண்டும். ஆகவே, சர்க்கார் அவர்களுக்கு உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது விஷயமாக நமது நண்பர் அவர்களும் சேர்ந்து கேட்பார்கள், சொல்லுவார்கள் என்று நம்புகிறேன்.

Sri A. GAJAPATHY NAYAGAR : நான் அவர்களுக்குக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை.

Dr. A. SREENIVASAN : அவருக்கு இஷ்டமில்லை.

*Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : நேற்று ஸ்ரீ பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் பேசும்போது, விவசாய வருமான வரி சம்பந்தமாகக் கணக்குகள் கொடுத்தார்கள். நேற்று சட்ட சபையில் ஸ்ரீ சீனிவாசய்யர் அவர்கள் பேசியிருப்பதைப் பேப்பரில் பார்த்தேன். அவர் பல விதங்களில் இருக்கிற கஷ்டங்களையும், அவைகளை எம்மாதிரி நிவர்த்தி செய்யலாம் என்பதையும் மிகவும் நன்றாக விளக்கிப் பேசியிருக்கிறார். சர்க்கார் இந்த விஷயத்தை நன்றாகக் கவனித்து விவசாயம் பெருக வழி வகை செய்து கொடுப்பார்கள் என்ற ஒரு நம்பிக்கையுடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த சேர்மன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(Sri A. Gajapathy Nayagar : தன் இடத்தில் எழுந்து நின்றார்.)

The Hon. Sri R. VENKATARAMAN : He cannot ask any question of another Member even if he is a Minister.

Sri A. GAJAPATHY NAYAGAR : I will explain myself this way.

Mr. CHAIRMAN : Not in this way.

Sri A. GAJAPATHY NAYAGAR : கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களின் பஞ்சப்படியை உயர்த்த வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அப்படிக் கொடுக்காத சந்தர்ப்பத்திலே இவர்களுடைய குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வசதி அளித்திருப்பதை நாம் பாராட்ட வேண்டுமென்று சொன்னேன். அவர்களுக்குப் பஞ்சப்படியை உயர்த்தக்கூடாது என்ற மனப்பான்மையில் சொல்லவில்லை. அம்மாதிரி யாராவது நினைத்தால், அதைத் தயவுசெய்து திருத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

* Sri T. P. SRINIVASAVARADAN : Mr. Chairman, last year, I did not feel unhappy when the Budget was presented. Just before the presentation of the Budget of last year, there were elections, and after the elections, the Cabinet perhaps had not made up its mind and, therefore, nothing was done for the teachers last year. This year, I am a little bit unhappy. We represented to

[Sri T. P. Srinivasavaradan] [5th March 1958

the Government some of our grievances and the Hon. the Minister for Education himself on the floor of this House admitted on more than one occasion that our demands were legitimate and just and that it was only for want of finance that he was unable to meet all the demands. We thought that at least some of our demands which did not involve much financial commitment would be met, when this Budget was presented. We represented to the Government that the disparity in the scales of pay of teachers should be removed first, that the scales of pay should be revised for the better, that the Pension Scheme should be extended to all categories of teachers, that the house-rent allowance should be granted to the teachers and that the Government should see that at least the enhanced dearness allowance of twelve rupees was given to each teacher. Let me take up the question of scales of pay. It has been pointed out to the Government more than once that different scales of pay are fixed for teachers in Government service, under local bodies and in aided institutions. If we take elementary school teachers, we find that the secondary grade teachers serving in Government elementary schools get Rs. 45—3—60—2—90 whereas those serving under local bodies get Rs. 45—2—85. If we take the higher elementary grade teachers, those who serve in Government schools get Rs. 30—1—50 and those under local bodies get only Rs. 30—1—45. In the case of the Madras Corporation, they get Rs. 31—1—45—1½—60 and in aided elementary schools, their pay is Rs. 30—1—33. So, we now find that a teacher serving in an aided institution
3-55 p.m. gets less than a teacher with the same qualification serving in a local body institution or a Government elementary school, I mean the same class of teachers with the same qualifications. We wanted that this disparity at least should be removed if the revision of scales of salaries for the better could not be taken up. That has not been done. The disparity still remains.

Another thing which I want to bring to the notice of the Government is this. In the case of aided elementary schools, there is no ban on the levy of school fees. So far as aided elementary schools in urban areas are concerned, they have been levying fees and with the fee income the managements have been able to give the teachers something more than the usual scale. But two years back the Government said that the compensation would be not at their rates but at the rate of four annas, six annas or eight annas. That is a very low rate of compensation. The managements are now unable to pay any higher salary. They have now reduced the scale of salary to the one stipulated for the purpose of grant. So far as teachers in elementary schools are concerned, we find that there is so much disparity. I know it is very difficult for the Government to find finance. I concede that point. If they revise the scales of pay of teachers, then they will have to revise the scales of pay of the Non-Gazetted Officers. I know that there is difficulty. But what we want is, 'Before revising the scales of pay of the teachers, at least put them on a par while the other categories of teachers whose qualifications are the same and whose worth is the same more or less.'

5th March 1958] [Sri T. P. Srinivasavaradan]

I want to bring to the notice of the Government one other thing. I recently went to Mangalore. You know the scales of salaries of teachers in Mysore were very low. They have suddenly raised the scales of salaries. The scale for the secondary grade teacher there is Rs. 50—3—80—4—100. But our scale here is Rs. 45—3—60—2—90. The maximum has been raised by Rs. 10 and the minimum by Rs. 5 there. Then the L.Ts. there get Rs. 85—5—90—6—150—10—200. In our State the maximum is only Rs. 175, the scale being Rs. 85—5—125—10—175. They have suddenly raised the scales of salaries in the case of L.T's. and also in the case of secondary grade teachers. It is a good feature. I do not say that it is sufficient for us but there has been an enhancement in the scale of salary. I also saw in the papers that the Kerala Government and the Mysore Government, for raising the scales of salaries of teachers, have been promised some grant by the Central Government. I do not know whether such a promise has been made to our Government or not. (An hon. Member : They have not asked for it.) In any case, we poor teachers have to suffer. Therefore, Sir, the first thing to do is to remove the disparity in scales of pay and then to increase the scales by at least a few rupees, though not much.

Coming next to the extension of the Pension Scheme, I am really sorry to say that the Government have not been able to concede this very small demand. This is the point. We have now got something like 120,000 teachers in the elementary schools and the secondary schools put together. Of these 112,000 we have got 73,600 in the elementary schools and 8,000 in the basic schools. These teachers get pension now. In the secondary schools we have got about 20,000 teachers. Out of these, there are nearly 1,500 teachers in Government schools and of the remaining 18,500, nearly about 12,500 are benefited by the pension scheme. You may ask, 'how?' The Government have granted pension to secondary grade teachers, second grade pandits, drawing masters, physical instructors and craft instructors. The only categories now omitted are L.T's. and first grade pandits and physical directors. These are the three categories which have been omitted. So, out of nearly 112,000 teachers, the Government have excluded only 6,000 teachers. Of these 6,000 teachers only about 2 to 3 per cent retire. The maximum that an L.T. or a First Grade Pandit would get will not be more than Rs. 45 and the total to be paid as pension in a year won't be more than Rs. 70,000. The Budget expenditure is Rs. 62 crores. I really wonder whether this Government cannot afford to spend Rs. 70,000 on this item. In the secondary schools the majority of the teachers get the benefit of the pension. Only a few are excluded. Their salaries are not very high.

Coming next to enhanced dearness allowance, last year they first gave Rs. 5 extra dearness allowance and then raised it to Rs. 12. This enhanced dearness allowance of Rs. 12 was given to all Non-Gazetted Officers. Then they said that all employees of the local boards would get this. Then they said that all elementary school teachers would get this enhanced dearness allowance.

[Sri T. P. Srinivasavaradan] [5th March 1958

Of the 19,684 teachers in the secondary schools, nearly 50 per cent are in district board schools. Of the remaining 50 per cent who are in the aided institutions, namely, eight or nine thousand teachers, only 4,000 get this enhanced dearness allowance. You may ask, "How is it that it is so?" It is because the Government have added a rider to this grant of enhanced dearness allowance, namely, 'The aided secondary school managements may be permitted to grant this'. If they had stopped with that, it would have been very good. But they still further added to that and said, 'The loss of fee income would be reimbursed to them only at the rates of fees levied in the year 1955–56'. Now, each teacher has to be paid Rs. 12 more. If you take my school, the extra expenditure involved in paying that increased dearness allowance is Rs. 20,000. If the Government pay Rs. 10,000, the management will have to find the balance of Rs. 10,000. Every school will have to find 50 per cent of this extra expenditure on payment of enhanced dearness allowance. But if the Government were to say that they would compensate only at the rates of fees the schools levied in 1955–56, it would be absolutely impossible for them to pay the enhanced dearness allowance. The result is that many aided institutions have not granted the enhanced dearness allowance. Then, when we pressed on the Hon. Minister this point, he said that he was expecting some grant from the Central Government. We were hoping and hoping that the entire dearness allowance of Rs. 12 would be given by the Government. It is high time for the Government to see that they either compensate this amount in full or allow the aided institutions to levy more fees telling them at the same time that they would compensate the loss in fee income at the new rates, and not at the old rates. Everybody knows the cost of living has increased, the price of stationery has gone up, and the prices of everything have gone up. So, I would request the Government to see that the benefit of the enhanced dearness allowance is given to all teachers in the aided institutions. The teachers in Government schools, elementary schools and local board schools get the benefit. The number of teachers who have been excluded from this benefit is very small.

Then, Sir, coming to the recent announcement of the Government, which people praised so much, on which also I certainly congratulate the Government, extending the benefit of full fee concessions to the children of Non-Gazetted Officers up to VI Form, I say it is very good. But I ask, 'To how many have the Government extended or granted this concession?' They have granted this concession to $1\frac{1}{2}$ lakhs of Non-Gazetted Officers. Not to one or two. We have already granted this concession in the case of elementary school teachers who number about 81,000 and odd inclusive of those in basic schools. So, 230,000 employees—$1\frac{1}{4}$ lakhs of Non-Gazetted Officers and 80,000 elementary school teachers—have the benefit of educating their children free up to VI Form. Then, whom have the Government excluded? They have excluded only about 19,000 teachers in the secondary schools.

5th March 1958] [Sri T. P. Srinivasavaradan]

Their children get free education up to III Form and they have to pay half-fee from IV Form up to the VI Form which others have been paying till recently. Even out of these 19,000 teachers, 1,500 are in Government schools. I am quite sure they will slowly extend this concession to teachers in local bodies and only teachers in aided institutions will be made to suffer.

SRI T. PURUSHOTHAM : Why do you think that it will not be extended to teachers in aided institutions?

* SRI T. P. SRINIVASAVARADAN : If the hon . Member speaks on behalf of the Government, then surely I will doubly convey my thanks to them if it is extended.

My point is, there was a Minister for Education in 1939.

SRI T. PURUSHOTHAM : Is it to be presumed that whatever is said on this side of the House represents the view of the Government? 4 p.m

* SRI T. P. SRINIVASAVARADAN : If the Government extend the concession, I shall feel doubly thankful to them. I wonder why they have not stated so. What prevented them from saying that also? Some years ago, in 1938 or 1939, when we waited in deputation on the Education Minister, the then Education Minister stated, ' The teachers in Government institutions are our children. The teachers in local body schools are our step-children '. and the teachers in aided schools are nobody's children. (Laughter.) That is what exactly happens now. Take the Pension Scheme. There are so many thousands of teachers. The Government have granted pension to more than one lakh of teachers. But they have excluded about 6,000 teachers from the scheme. Take, again, the fee concession. The Government have granted this concession to nearly 230,000 employees inclusive of the Non-Gazetted Officers and they have excluded for that purpose about 12,000 teachers.

SRI T. PURUSHOTHAM : They are not included yet. (Laughter.)

SRI K. M. RAMASAMY GOUNDER : Will the Government give retrospective effect to the order?

* SRI T. P. SRINIVASAVARADAN : I am coming to the house-rent allowance. It has been the policy of the Government that whatever allowance is granted to the Non-Gazetted Officers should be extended to the teachers also. But the only allowance that has not been so granted is the house-rent allowance. If we take the whole State, we will find that only teachers in certain areas get this house-rent allowance. Practically, all teachers in local board schools get this house-rent allowance provided that area is included in the areas eligible for this allowance. The remaining number of teachers is 50,000, who are employed in aided elementary schools. Out of these 50,000 teachers, we find that 30,000 teachers live in areas which are not eligible for this house-rent allowance. Only 20,000 teachers are, therefore, eligible for this allowance. But they have been denied this allowance. The

[Sri T. P. Srinivasavaradan] [5th March 1958

allowance varies from Rs. 5 to Rs. 15. On an average, each teacher may get about Rs. 10. This works out to Rs. 8 lakhs a year. If the Government grant this enhanced dearness allowance and house-rent allowance and extend further the Pension Scheme to the teachers which involves an expenditure of not more than Rs. 70,000 per annum, I think the teachers would be very much satisfied, at any rate, for the present and they will not press any other demand.

My next point is about the Second Five-Year Plan.

MR. CHAIRMAN : The last point.

* SRI T. P. SRINIVASAVARADAN : Yes, Sir. I shall try to finish within five minutes. Now, we find here an item of Rs. 12·57 lakhs as grants from the Government of India towards revision of scales of pay, dearness allowance, etc. There is an increase of Rs. 2·07 lakhs over the amount provided in the previous year. In the previous year, the figure was Rs. 10·50 lakhs. I do not know whether the increase represents increase in the dearness allowance or in the salaries.

I next come to the opening of multi-purpose schools. A sum of Rs. 15·03 lakhs is given by the Government of India for this purpose. A sum of Rs. 4·16 lakhs is given for improvement of facilities for teaching of science, etc.—the core subjects—and for improvement of libraries in secondary schools. Where there are four schools in an area, the Government give one school a grant of Rs. 15,000 for the teaching of core subjects. What prevents them from asking the management of that school to give apparatuses and library facilities to the other schools? The Government cannot equip the laboratory in all the schools. They cannot provide the library with all the books. But all the resources can be pooled together. I find one school having a fully equipped laboratory, but a neighbouring higher elementary school is not at all equipped. Maps and other things we use only during certain parts of the year. For the remaining parts of the year they are not used. Since there is not adequate money, I would request that all our resources should be pooled together wherever possible. It may not be possible in big schools. But wherever there are small schools, it is possible to pool all the resources together till we are able to find money to equip all the schoos with these necessary things.

I am glad to note one thing here. It is stated here that the question of conversion of middle schools into basic schools has been postponed. I wish they converted the so-called elementary schools into basic schools after getting the necessary implements and the necessary number of trained teachers. Do not simply change the name and then call it basic school. Simply because the Government give more grants to those schools, the teachers undergo refresher course in two months and come back. The school is called a basic school and it is given 70 per cent grant whereas the schools which have been following the old methods are starved further and further. I would like to know what is entirely wrong with the present non-basic schools. They teach

5th March 1958] [Sri T. P. Srinivasavaradan]

the three R's. A committee must be appointed to examine the structure of these basic schools and find out how far they have been rendering useful service to the community. My own humble opinion is that it is a sheer waste of money to spend on these basic schools when teachers are not fully equipped for the purpose.

Dr. V. K. JOHN : Is there any basic school?

* Sri T. P. SRINIVASAVARADAN : There are a number of basic schools.

காங்கிரஸ் அரசாங்கம் ஆரம்பமான காலத்தில், கைத்தொழில்களே நகரங்களில் ஆரம்பிக்கக்கூடாதென்றும், அவைகளேக் கிராமங்களில் பரவலாக ஆரம்பிக்க வேண்டுமென்றும் நாங்கள் சொல்லிக்கொண்டிருந்தோம். எல்லாம் பரவலாக இருக்கவேண்டுமென்றும், ஸ்தாபனங்களில் ' டீஸெண்ட்ரலேஸேஷன் ' இருக்க வேண்டுமென்றும் இப்போதும் நாம் சொல்லிக்கொண்டிருக்கிருேம். ஆனல், இப்போது என்ன நடக்கிறது ? இப்போது, எல்லா பெரிய தொழில்களும், ' மீடியம் ஸைஸ் ' தொழில்களும் நகரங்களில் தான் இருக்கின்றன. சென்னேயிலேயே, கடந்த பத்து வருஷங்களில் பெரிய கைத்தொழில்கள் எத்தனேயோ ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலேயில் எல்லாக் கைத்தொழில்களேயும் நகரங்களில் ஆரம்பித்து நகரங்களே நரகங்களாக்கக்கூடாது. நகரவாசிகளுக்கு இருக்கும் சில அனுகூலங்களேப் பார்த்து விட்டு, ' நாமும் நகரத்திற்குச் சென்ருல், அங்கே உடலுழைப்பின்றி அதிக ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு சுகமாக இருக்கலாம் ' என்று எண்ணி, கூலிக்காரன் முதல் பெரிய தொழில் பிரமுகர்கள் வரையில், கிராம மக்கள் எல்லோரும் நகரங்களுக்கு வருகிருர்கள். இந்தப் பிரச்னேயை மத்திய அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கமும் கவனிக்க வேண்டும். இந்தத் தொல்லேயை நீடிக்கவிடக் கூடாது. கிராமங்களிலுள்ள படித்தவர்கள் எல்லோரும் நகரங்களுக்கு வந்துவிடுகிருர்கள் ; நகரங்களிலுள்ளவர்களேப் போல் தாங்களும் கொஞ்சம் அதிக வசதியுடனும், நாகரீகமாகவும் இருக்க வேண்டுமென்றும், உடலால் வேலே செய்யாமல் மூளேயைக் கொண்டே அதிகப் பணம் சம்பாதிக்க வேண்டுமென்றும் ஆசைகொண்டு அவர்கள் நகரங்களுக்கு ஓடிவருகிருர்கள். நகரங்களிலிருந்து

6th March 1958] [Sri O. P. Ramaswami Reddiar]

ஒரு சிலராவது கிராமங்களுக்குச் சென்று அங்கே தொழில்களை ஆரம்பித்தால், அவர்களைப் பார்த்து மற்றவர்களும் கிராமங்களுக்குப் போவார்கள். ஒரு சிலராவது அப்படிச் செய்தால் பல தொழிலாளர் களுக்குக் கிராமங்களில் வேலை கிடைக்கும். பலர் கிராமங்களுக்குச் செல் வார்கள். ஆகவே, கிராமங்களில் கைத்தொழில்களை ஆரம்பித்து நடத்த வேண்டும். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். அரசாங்கத்தார் சொல்வது ஒன்றும், அவர்கள் செய்வது வேறொன்றுமாக இருக்கிறது. அப்படி இருக்கக் கூடாது. இப்போது எல்லாத் தொழில்களும் நகரங் களில் தான் இருக்கின்றன. இதைப்பற்றி விவரமாகத் தெரிவிக்க வேண்டு மென்றால், கனம் அமைச்சர்களுக்கு நான் கடிதம் எழுதுகிறேன்.

உணவு உற்பத்தி சம்பந்தமாக, சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். ஒரு பக்கத்தில் பஞ்சம் இருக்கிறது. இன்னொரு பக்கத்தில் நீர்ப்பாசன வசதிகள் போதிய அளவிலும் சரியான முறையிலும் இல்லை. விவசாயி தன் கஷ்டங்களை அரசாங்கத்திற்குத் தெரிவிக்க முடிவதில்லை. காரணம், விவசாயிகள் பல பிரிவினர்களாக இருக்கிறார்கள். மற்றத் துறை களிலுள்ள மக்கள் ஒன்று சேர்ந்து தங்கள் குறைகளைக் கூச்சலிட்டு அரசாங்கத்திற்குத் தெரிவிக்கிறார்கள். விவசாயிகளுள், பெரு நிலச்சுவாந் தார்கள், சிறு நிலச்சுவாந்தார்கள், சாகுபடி செய்யும் விவசாயிகள், விவசாயக் கூலிகள் ஆகிய பல பிரிவினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக் குள் ஒற்றுமை இல்லை. ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினருடன் ஒன்று சேர்ந்து கிளர்ச்சி செய்வதில்லை. நான் யாருக்கும் பரிந்து பேசவில்லை. நான் இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பது நமது நோக்கமாக இருக்கிறது ; அதற்கான காரியங்களை நாம் செய்ய வேண்டும். இயற்கை சில சமயங்களில் நமக்கு அனுகூலமாக இருக்கிறது, சில சமயங்களில் நம்மை ஏமாற்றுகிறது.

இன்னொரு பக்கம் ஜனசங்கியை அதிகமாகிக்கொண்டு வருகிறது. எல் லோரும் படிப்பதற்கு வாய்ப்பு வந்த பிற்பாடு, கிராமத்திலே படித்தவர் களெல்லாம் உடல் உழைப்பு வேண்டாம் என்ற மனப்பான்மையில் போய்க் கொண்டிருக்கிறார்கள். இப்போது அரசாங்க உத்தியோகத்தில்தான் எல் லோருடைய எண்ணமும் போய்க்கொண்டிருக்கிறது. எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்துவிட்டால், உடனே வேலை கொடுங்கள் என்று தொந்தரவு செய்கிறார்கள். எவ்வளவு பேர்கள் இம்மாதிரி வருகிறார்கள் ? நான் எங்கேயோ ஒரு மூலையில் கிராமத்தில் இருக்கிறேன். அங்கே வந்து தொந்தரவு செய்கிறார்கள். நான் யாருக்கும் சிபாரிசு செய்வதில்லை. அப்படியிருந்தபோதிலும், அவர்கள் என்னை விடுவதில்லை. காரணம் என்ன ? பரிதாபகரமான நிலை நிலவுகிறது. படித்தவர்கள் ‘ தாங்கள் எதற்கும் லாயக்கில்லை, அரசாங்க உத்தியோகத்திற்கு யாராவது சிபார்சு செய்தால் நடக்கும் ’, என்று நினைத்து ‘ நீங்கள் சிபார்சு செய்யுங்கள் ’ என்று பரிதாபகரமான நிலையில் கேட்கிறார்கள். அந்த முறையிலே படித் தவர்களின் நிலை இருக்கிறது. கிராமங்களிலே இப்பொழுது எஸ்.எஸ். எல்.ஸி. படித்தவர்கள் முன்னைவிட அதிகம். எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்துவிட்டு வேலையில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதற் குக் காரணம் அவர்கள் உடல் உழைப்புக்குத் தகுந்த முறையில் படிப்பைப் பெறவில்லை. ரூபாய் 50 சம்பளத்திற்கு இந்தப் படிப்பு குமஸ்தாவாக அவர்களுக்கு உதவும். சமூகத்திற்கு அது உதவியாக இல்லை. ஓரளவு அவரவர் குடும்பம் வரையில் உதவி செய்கிறது. எவ்வளவு பேர்களுக்குத்தான் அரசாங்கம் உத்தியோகம் கொடுக்க முடியும் ? ஏதோ 200, 300 பேர்களில் ஒருவருக்குத்தான் உத்தியோகம் கொடுக்கலாம். அதற்குப் பிறகு துவேஷம்தான் நிலவுகிறது. பிராம் மணன், அப்பிராம்மணன், ரெட்டியார், முதலியார் என்றெல்லாம் சண் டைக்குப் புகலிடமாக இருக்கிறது இது. காங்கிரஸ் பார்டியாக இருக்கட்டும், கம்யூனிஸ்டு பார்ட்டியாக இருக்கட்டும், அல்லது யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும், கருப்புச் சட்டையாக இருக்கட்டும், சிவப்புச் சட்டையாக இருக் கட்டும், எந்தச் சட்டையாக இருக்கட்டும், துவேஷத்திற்குப் புகலிடமாக

இருக்கிறது இது. இந்த முறையிலே போய்க்கொண்டிருந்தால், என்ன ஆவது ? ஆளை அடிக்கும் நிலைமை கூட வந்துவிட்டது. ஒரு உத்தியோகம் கொடுப்பதற்கு 200 பேர்கள் இருந்தால், அதில் 199 பேர்கள் தெரிந்தோ, தெரியாமலோ இந்த முறையில் போய்க்கொண் டிருக்கிறார்கள். எதற்கும் ஒரு லிமிட் வேண்டும். வெறி பிடித்தால் கூட, அதற்கு ஒரு லிமிட் வேண்டும். வெறி அதிகமாகிக்கொண்டிருக்கி றது. என்ன காரணம் ? சமூகத்தினுடைய நிலை, தனி மனிதனுடைய நிலை, அரசாங்கத்தார், கட்சிகள், தொழிலிலே பாகுபாடு, அதற்குத்
5-10 p.m. தகுந்த முறையிலே வேலையின்மை, வேலை கொடுத்தாலும் செய்வதற்கு மனமின்மை—இவைகளெல்லாம்தான் காரணம். எல்லோரும் வேலை செய்யாமலே மூளையை வைத்துக்கொண்டு பிழைக்கவேண்டுமென்று எண் ணுகிறார்கள். முன் காலத்தில் அநேகமாக எல்லோரும் உழைத்தார்கள். நூற்றுக்கு ஒன்றிரண்டு பேர்கள்தான் மூளையை வைத்துக்கொண்டு வேலை செய்யாமல் சம்பாதிப்பார்கள். அவர்களும் சும்மா இருப்பவர்கள் இல்லை. அவர்கள் படித்தவர்கள், பணம் படைத்தவர்கள், மானேஜ்மெண்ட் செய்பவர்கள். ஆனால், இந்தக் காலத்தில் எல்லோரும் வேலை செய்யாமலே ஊதியம் பெறவேண்டும் என்று நினைக்கிறார்கள். இது எப்படி நடக்கும் ? இந்த முறையிலே துவேஷம் தான் அதிகமாகிக்கொண்டிருக்கிறது.

Dr. A. SREENIVASAN : வழி என்ன ?

* Sri O. P. RAMASWAMI REDDIAR : வழிதான் சொல்லுகிறேன். எல்லோரும் நாக்கை அடக்க வேண்டும். கொஞ்சமாக இருப்பதை, நம் விருப்பு வெறுப்பை வைத்துக்கொண்டு அதிகமாகத் தூண்டி விட்டால், சாதாரண ஜனங்களிடையே துவேஷம் உண்டாகும்படியான நிலை ஏற்படு கிறது. எல்லா பார்ட்டிகளும், காங்கிரஸும், எல்லோரும் தான் இதைச் செய்துகொண்டிருக்கிறோம். இரண்டு பேர் சேர்ந்தால் என்ன பேசுகிறோம் என்று பார்த்தால் இதேதான். நான் பார்க்கிறேன். இந்த முறையிலே நாட்டிலே அழிவு சக்திகள் அதிகமாகத் துவேஷத்தை உண்டாக்கிக் கொண் டிருக்கின்றன. அதன் பலன்தான் இப்பொழுது ஹைட்ரஜன் பாம். மற்ற பாம்களைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. என்ன செய்யப் போகி றோம் என்று எனக்கே தெரியவில்லை. ' அட்மாஸ்பியர் ' பூராவும் விஷம் பரவிக்கொண்டே இருக்கிறது. ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை இல்லை. பலன் தொந்தரவும் துவேஷமும் அதிகமாகிக்கொண்டிருக்கின்றன. எல் லோரும் இதற்குப் பொறுப்பாளிகளாக இருக்கிறோம் தெரிந்தோ, தெரி யாமலோ.

தேர்தலைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். தேர்தல் என்ன செய்கிறது ? 10 வருஷங்களிலே முன்னேற்றம் என்று சொல்லுகிறார்கள். நாம் பார்க் கும்பொழுது ஒரு பக்கம் முன்னேற்றம் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் பின்னேற்றத்தில்தான் அதிக முன்னேற்றம் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் ? எங்கு பார்த்தாலும் துவேஷம், ஒருவரை ஒருவர் நம்பாத நிலை. குடும்பத்திலே துவேஷம், கிராமத்திலே துவேஷம், நகரத் திலே துவேஷம், கட்சியிலே துவேஷம், இவைகளெல்லாம் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. ஆதலால், அடிப்படைத் தத்துவத்தையே மாற்ற வேண்டும். அதற்கு இந்தக் கல்வி முறை சரியில்லை. அதை மாற்ற வேண்டும். (Sri P. T. Rajan : Quite right). மத சம் பந்தமான படிப்பு முறையை எல்லா அரசாங்கங்களும் எதிர்க்கிறார்கள். அது அடிப்படையாக இல்லாததால் தான் இந்த நிலை வந்திருக்கிறது. வெறி பிடித்த மதமும் கூடாது. அதனாலேதான் உபத்திரவம் எல்லாம் வரும். சம தர்ம முறையிலே, கடவுள் ஒருவர் என்ற முறை யிலே, அந்த போதனை இருக்க வேண்டும். அதைத்தான் எல்லா மதங்களும் போதிக்கின்றன. மனிதனுடைய துவேஷத்தையும் மன நிலை யையும் கடவுள் ஒருவர்தான் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவர்தான் உலகத்தைப் பார்க்கிறார். உலகம் அவரை எப்படிப் பார்க்கின்றதோ அப் படித் தெரிகிறது.

' கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு '

6th March 1958] [Sri O. P. Ramaswami Reddiar]

என்ருர் வள்ளுவர். இந்த மாதிரி இருக்கிறது இப்பொழுதுள்ள நிலைமை. பேசுவது ஒன்று, நடப்பது ஒன்று, நினைக்கிறது ஒன்று. இந்த முறையிலே போய்க்கொண்டிருந்தால் என்ன செய்வது என்று தெரியவில்லை.

உணவு உற்பத்தி போதுமானதாக இல்லை. பசி வந்திட பத்தும் பறந்து போம். உணவு நிலையைப்பற்றி ராஜ்ய அரசாங்கம் இப்பொழுது வரவு செலவுத் திட்ட அறிக்கையிலே சொல்லியிருப்பது சரியல்ல. அதில் அதிகத் தொந்தரவு இருக்கிறது என்பதை மறந்துவிட்டார்கள். சரியான புள்ளி விவரங்கள் வராததால் தான், இப்படிச் சொல்லியிருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். இனிமேலாவது அதைச் சரியான முறையில் சொல்ல வேண்டும். இந்த ஒரு வருஷம் திண்டாடித்தான் ஆக வேண்டும். ஆந்திரா நம்மை மதிப்பதில்லை, வேண்டாம், அவர்கள் எப்பொழுதும் தொந்தரவுதான்.

Sri V. V. RAMASWAMI : பிரிந்தது நல்லது.

* Sri O. P. RAMASWAMI REDDIAR : இருக்கிற இடத்திலிருந்து உணவு இல்லாத இடத்திற்கு வந்து தானே ஆகவேண்டும். அதற்கு ஏதாவது செய்யத்தான் வேண்டும். இங்கே போதாமல் இருக்கும்பொழுது, கேரளத்திற்கு அரிசி அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. அமைச்சர்களும் கூச்சல் நிறையப் போடுகிருர்கள். ஆனல் அதை மத்திய அரசாங்கத்தில் இருப்பவர்கள் கேட்பதில்லை. மத்திய அரசாங்கத்திற்கு ராஜ்ய அரசாங்கம் உட்பட்டது என்று மாத்திரம் அவர்கள் நினைத்துக்கொண்டிருந்தால், பிரயோஜனம் இல்லை. ராஜ்ய அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் சேர்ந்து ஜனங்களுடைய நன்மைக்காக இருக்கிறது என்ற மனப்பான்மையிலே அவர்கள் எப்பொழுது வேலை செய்கிருர்களோ, அப்பொழுது தான் நாட்டிற்கு நலன் உண்டாகும். தாங்கள் எஜமானன், மற்றவர்கள் கீழே இருப்பவர்கள் என்று நினைத்தால், காரியம் ஒன்றும் நடக்காது. அதே மாதிரி நாமும் அவர்கள் யாரோ, நாம் யாரோ என்று நினைத்துக்கொண்டு அதிக துவேஷத்தை உண்டாக்கி, நாட்டைப் பிரித்தாகவேண்டும் என்று தொந்தரவு செய்துகொண்டிருந்தால், பலன் ஒன்றும் கிடைக்காது. இன்னும் துவேஷமும் தொந்தரவும் தான் அதிகரிக்கும். கொஞ்சம் இதையெல்லாம் யோசனை செய்து நடந்துகொள்ள வேண்டும். நம்முடைய விருப்பு வெறுப்பை வைத்துக்கொண்டு துவேஷத்தைத் தூண்டிக்கொண்டிருக்கக்கூடாது. இன்று நாம் அமைச்சர்களாக இருக்கலாம், அங்கத்தினர்களாக இருக்கலாம், மெஜாரிடி பார்ட்டியாக இருக்கலாம். யாராயிருந்தாலும், ஜனங்களுடைய நன்மையை உத்தேசித்துத் தான் எல்லாக் காரியங்களையும் செய்யவேண்டும். தொண்டு புரிவதை நாம் மறந்துவிடக்கூடாது. துவேஷத்தை அதிகமாக வளர்த்துக்கொண்டிருந்தால், அது நம் வாழ்க்கையை நடத்துவதற்குத் தகுந்த அடிகோலாகாது.

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு அதிகமாக வேலை செய்ய வேண்டும். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்ருல், உணவு உற்பத்தி விஷயத்தில் இப்பொழுது **efficiency** குறைந்துவிட்டது. மற்றத் தொழில்களில், அதாவது வியாபாரம், 'இண்டஸ்ட்ரி' முதலானவைகளில் கொஞ்சம் பரவாயில்லை. அந்தத் துறைகளில் உற்பத்தி கொஞ்சம் கூட வருகிறது. ஏனென்ருல் அவர்களுக்கு ஊதியமும் கொஞ்சம் கூட வருகிறது. ஆனல் விவசாயத்திலே முன்னல் 10 பேர்கள் செய்த வேலையை இப்பொழுது 20 பேர்கள் செய்கிருர்கள். 'பொலிடிகல் பார்டீஸ்' இருக்கின்றன. எவ்வளவு தூரம் அவர்களை அதிகமாகத் தூண்டிவிட முடியுமோ அவ்வளவு தூரம் தூண்டிவிடுகிருர்கள். இவ்வளவும் அவர்கள் தலைமைக்காக நடக்கிறது. காங்கிரஸ், 'நான் காங்கிரஸ்' என்றெல்லா பார்ட்டிகளும்தான் இப்படிச் செய்துகொண்டிருக்கிருர்கள். ஒன்றும் வித்தியாசம் இல்லை. டிகிரியில்தான் வித்தியாசம். இம்மாதிரி இருப்பதினல் என்ன ஆகிறது ? கூலி அதிகமாகியிருக்கிறது. வேலையில் திறமை குறைந்திருக்கிறது. உற்பத்திக்கு அதிகச் செலவு ஆகிறது. உரம் முதலியவைகளை அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. நமது ராஜ்யத்தில் காவேரியைத் தவிர வேறு ஜல வசதி ஒன்றுமில்லை. நமது ராஜ்யத்தில்

50 லட்சம் ஏக்கர் நஞ்சை இருந்தால், காவேரி மற்றும் சிறு நதிகள் பாயும் டெல்டயிக் ஏரியா 17, 18 லட்சம் ஏக்கர் தான். பாக்கி சுமார் 30, 34 லட்சம் ஏக்கரில் மானம் பார்த்துத்தான் விளைய வேண்டும். அம்மாதிரி இந்த ராஜ்யத்திலே விவசாயம் நடக்கிறது. அது நல்ல முறையிலே நடப்பதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும்.

பெரிய ஜீவநதிகள் நம் ராஜ்யத்தில் இல்லை. நிறைவேற்றக்கூடிய திட்டங்களையெல்லாம் நாம் நிறைவேற்றி விட்டோம். இப்போது ஏதோ பரம்பிக்குளம் திட்டம் சர்ச்சையில் இருந்து வருகிறது. கிரியாறு திட்டமும் இருக்கிறது. தென்னுற்காடு ஜில்லாவில் கோமுகி நதி இருக்கிறது. அது ரொம்ப நாட்களாகக் கவனிக்கப்படாமல் இருக்கிறது. நான் முதல் அமைச்சராக இருந்தபோதே அந்த நதி நீரைப் பயன்படுத்துவதற்கான பாசனத் திட்டத்திற்கு 'எஸ்டிமேட்' போடும்படி இலாகாவினரிடம் சொன்னேன். அது என்ன ஆனதோ, தெரியாது. விருத்தாசலத்தில் ஆறு இருக்கிறது. இந்த நதிகளைப் பயன்படுத்தி பாசனத் திட்டம் நிறைவேற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும்? கிருஷ்ணு-பெண்ணுறு நதிகளின் தண்ணீரை இங்கே கொண்டு வரவேண்டும்.

Sri V. V. RAMASWAMI : அந்த ராஜ்ய அரசாங்கத்தார் அந்தத் தண்ணீரை நமக்குக் கொடுப்பார்களா ?

* Sri O. P. RAMASWAMI REDDIAR : கொடுத்துத்தான் ஆகவேண்டும். நதித் தண்ணீரை வீணுக்குவதற்கு இந்த நாட்டில் யாருக்கும் உரிமை கிடையாது. கடலில் விழக்கூடிய நதித் தண்ணீரை எடுத்துக் கொள்வதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. மத்திய அரசாங்கத்தார் இதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும், இல்லாவிட்டால் எங்கேயாவது போகட்டும், அதாவது, தகராறை நல்ல முறையில் தீர்த்து வைப்பதற்கு மத்திய அரசாங்கத்திற்குத் திறமை இல்லாவிட்டால், மத்தியஸ்தம் செய்வதை விட்டு விடட்டும். நாட்டில் 36 கோடி பேர் இருக்கிறோம். 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று சொல்லிவிட்டு அரசாங்கம் சும்மாயிருந்துவிடலாமா ? அரசாங்கம் தன் கடமையைச் சரிவரச் செய்யவேண்டும். கோதாவரி நதியின் தண்ணீரில் 10 சத விகிதத்தைத்தான் அந்த ராஜ்யத்தினர் உபயோகிக்கிறுர்கள். அந்த நதியின் தண்ணீரை ஆந்திரா, பம்பாய் ஆகிய எல்லா ராஜ்யத்தினரும் உபயோகித்தாலும், மொத்தம் 20 சதவிகிதத் தண்ணீரைத்தான் உபயோகப்படுத்த முடியும். மீதி 80 சதவிகிதத் தண்ணீர் வீணுகிறது. கோதாவரித் தண்ணீரைக் கிருஷ்ணு நதிக்குக் கொண்டுவர முடியும். கிருஷ்ணு நதித் தண்ணீரை இங்கே கொண்டு வர முடியும். நான் முதன் மந்திரியாக இருந்தபோது, இது சம்பந்தமாக நதிகளில் ஆங்காங்கே தண்ணீர் லெவலை கணக்கிடச் சொன்னேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆந்திர ராஜ்யத்திற்கு சுமார் ரூ. 200 கோடியும் நமக்கு ரூ. 200 கோடியும் செலவாகும். திட்டத்தை நிறைவேற்றினுல், அது பாசனத்திற்கும், மின்சாரத்திற்கும் 'நாவிகேஷன்'-க்கும் பயன்படும். மூன்று காரியங்களுக்கும் உதவும் வகையில் தான் திட்டத்தை நிறைவேற்றவேண்டும். தனித் தனியாகத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றுவது உசிதமல்ல. கிருஷ்ணு நதியில் கர்நூலிலிருந்து பெஜவாடாவில் பத்து இடங்களில் 'வாடர் பால்ஸ்' இருக்கின்றன. அவைகளை மின்சாரத்திற்குப் பயன்படுத்தலாம். கோதாவரியிலும் 'வாடர்பால்ஸ்' இருக்கின்றன. எல்லாவற்றையும் 'இண்டர்லிங்க்' பண்ணவேண்டும். குந்தாத் திட்டத்தையும் மற்ற சில திட்டங்களையும் இணைக்க வேண்டும். மைசூரில் ஜாசப்பா நீர்வீழ்ச்சியில் ஏதோ ஒரு முறையைக் கையாளுகிறுர்கள். எல்லாத் திட்டங்களையும், இணைத்தால் தொல்லைகள் இருக்காது.

5 20 p.m. பணம் இல்லை என்பதால் இப்போது அரசாங்கத்தார் டீஸல் எண்ணெய்க்கு வரியை உயர்த்தியிருக்கிறுர்கள். இப்போது மின்சாரக் கரெண்டை பாசனக் காரியங்களுக்குப் பயன்படுத்த முடிவதில்லை. ஏனென்றுல், மின்சார மோட்டார்களுக்குக் கரெண்டை மின்சார இலாகாவினர் ராத்திரித்தான் கொடுக்கிறுர்கள். எல்லாப் பயிர்களுக்கும் இரவில் தண்ணீர்

6th March 1958] [Sri O. P. Ramaswami Reddiar]

பாய்ச்ச முடியாது. வயலில் எல்லா இடங்களிலும் மின்சார விளக்குகளைப் போட முடியுமா? வயல்களில் பாம்புகள் இருக்கும். ஆகவே, இரவில் வயல்களில் நடமாடுவது அபாயகரமானது. நெற் பயிருக்கு வேண்டுமானால், இரவில் தண்ணீர் பாய்ச்சலாம். நெல் வயலில் நண்டுகள் தொளை போடுகின்றன. நெல் வயலில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக்கும்போது, நண்டுகள் தொளை போடுவதால், தண்ணீர் வெளியில் போய் விடுகிறது. இந்தத் தொல்லைகள் இருப்பதால் மின்சார மோட்டார் வைத்திருப்பவர்கள் அத்துடன் டீஸல் என்ஜினையும் வாங்கி வைத்திருக்கிறார்கள். இந்த நிலையில், அரசாங்கத்தார் டீஸல் எண்ணெய்க்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள்.

Sri K. BALASUBRAMANYA AYYAR: ஆகையால் இன்னும் வரி போடக்கூடாது அல்லவா?

*** Sri O. P. RAMASWAMI REDDIAR:** அதைப்பற்றிச் சொல்கிறேன். யாருக்கு அதிகமாகத் தொந்தரவுகள் இருக்கின்றனவோ, அவர்களுக்குத் தான் வரிகள் போடப்படுகின்றன. எவன் ஒன்றும் ஆட்சேபணை சொல்வதில்லையோ ஒன்று சேர்ந்து அவன் தலையில் வரிச் சுமையைப் போடவேண்டுமென்று அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. அந்த நிலை மத்திய அரசாங்கத்திலும் ராஜ்ய அரசாங்கத்திலும் ஏற்பட்டு விட்டது. ஜீவ நதிகளின் தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்து நிறைவேற்ற வேண்டும்.

ஜீவ நதிகள் இல்லாத இடங்களில், பூமிக்குக் கீழே இருக்கும் தண்ணீரை மேலே கொண்டுவரும் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். அப்படிப்பட்ட திட்டங்களை அரசாங்கத்தார் நிறைவேற்றிக்கொண்டுதான் இருக்கிறார்கள். குழாய்க் கிணறுகளையும், வடிமுனைக் கிணறுகளையும் (பில்டர் பாயின்ட் வெல்ஸ்) ஆங்காங்கே அரசாங்கத்தார் அமைத்து வருகிறார்கள். எந்த இடங்களில் அதிகத் தண்ணீரைப் பூமிக்கு வெளியே கொண்டு வரமுடியுமோ அந்த இடங்களில் அந்தக் கிணறுகளைத் தோண்ட வேண்டும். குழாய்க் கிணறுகளுக்காக 40 லட்ச ரூபாயோ 50 லட்ச ரூபாயோ திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவை எந்த எந்த இடங்களில் தோண்டப்படும் என்ற விவரம்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப் புத்தகத்தில் இல்லை. அந்த விவரத்தை ஏன் குறிப்பிடவில்லை என்று தெரியவில்லை. ராஜ்யத்தில் முப்பது குழாய்க் கிணறுகள் வெட்டப்பட்டன என்றும், அவைகளில் 10–12 தான் வெற்றிகரமாக வெட்டப்பட்டன என்றும் தெரிகிறது. எங்கே அடி ஊற்றுக்கள் இருக்கின்றனவோ அங்கே இவைகளை வெட்ட வேண்டும். எங்கேயாவது வெட்டப்படும் 20 கிணறுகளில் 18 கிணறுகள் வெற்றியடைந்தால், அந்தப் பிரதேசத்தில் இவைகளை அமைக்க வேண்டும்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இப்போது வெட்டப்பட்ட கிணறுகள் பரீட்சார்த்தமான முறையில் வெட்டப்பட்டவை.

*** Sri O. P. RAMASWAMI REDDIAR:** சரி. அதிகப் பாறைகளும் கற்களும் இல்லாத இடங்களிலும், பாதாள ஊற்றுக்கள் இருக்கக்கூடிய இடங்களிலும் இந்தக் கிணறுகளை வெட்ட வேண்டும். இப்போது நெய்வேலியில் இந்தக் கிணறுகளைத் தோண்டியிருக்கிறார்கள். செங்கற்பட்டில் மஹாபலிபுரத்திற்குப் பக்கத்தில் தோண்டியிருக்கிறார்கள். அந்த இடம் தகுந்த இடம். அங்கே ஆர்டீஷியன் கிணறுகள் கூட அமைக்கலாம். திண்டிவனத்தில் சில இடங்கள் இந்தத் திட்டத்திற்குத் தகுந்தவையாக இருக்கும். சிதம்பரத்திலும் பாளையங்கோட்டையில் இதற்கேற்ற இடங்கள் இருக்கும். செங்கற்பட்டில் சில இடங்கள் இதற்கேற்றவையாக இருக்கும். சில இடங்களில் பாறைகள் இருக்கும். டெல்டாப் பிரதேசங்கள் இதற்கு ஏற்றவையாக இருக்கும். கடலூர் தாலூகாவில் காடாம்புலியூரில் தண்ணீரே கிடையாது. அங்கே 150 முதல் 180 அடி ஆழம் தோண்டினால் தான் தண்ணீர் வருகிறது. கடலூர் தாலூகாவில் 60–70 கிராமங்களில் நிறைய ஜலம் கிடைக்கிறது. அங்கே கிணறுகள் தோண்டலாம். சில

C 105—6-3-58—6

கிராமங்களில் தண்ணீர் கிடையாது. அங்கே கிணறுகள் தோண்டுவதும் கஷ்டம். அங்கேயெல்லாம் 'பெர்குஸன் ட்ரில்ஸ்' மூலம் தான் கிணறு தோண்ட முடியும். சாதாரண 'ட்ரில்ஸ்' மூலம் அங்கெல்லாம் கிணறு தோண்ட முடியாது. இந்தியாவிலேயே வேறு எங்கேயும் அப்படிப்பட்ட இடத்தைப் பார்க்க முடியாது. தண்ணீர் பஞ்சத்தின் காரணமாக ஜனங்கள் அங்கே பல நாட்களுக்கு ஒரு முறை தான் குளிக்கிறார்கள். அங்கே, குடிப்பதற்கோ குளிப்பதற்கோ தண்ணீர் கிடைக்காதென்றால், நீர்ப்பாசன வசதியைப்பற்றிக் கேட்கவே வேண்டாம். அந்தமாதிரியான இடங்களில் இந்தக் கிணறுகளை வெட்ட வேண்டும். இப்படிப்பட்ட இடங்களுக்கான நீர்ப்பாசனத் திட்டங்களை ரெவின்யூ செலவினத்தின் கீழ் எடுத்துக் கொண்டுதான் நிறை வேற்ற வேண்டும். பணம் செலவு செய்தால் அதற்குப் பிரதிபலனாக வருவாய் கொடுக்கக்கூடிய திட்டங்களைத் தான் 'காபிடல் எக்ஸ்பெண்டிசர்'ன் கீழ் எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஆகவே, மூலதனச் செலவின் கீழ் திட்டங்களை நிறைவேற்றினால், அரசாங்கத்தார் வரியைப் போடுகிறார் கள். இந்த நீர்ப்பாசனத் திட்டங்களில் **productive irrigation, protective irrigation** என்ற இரு வகைகள் இருக்கின்றன. **protective** திட்டம் பஞ்சத்திலிருந்து காப்பதற்காகப் போடும் திட்டம் **(protection from famine)** ஆகும். இந்தப் பிராந்தியங்களில், 60 லட்சம் ஏக்கரில் 30 லட்சம் ஏக்கர் இப்படிப்பட்ட பிரதேசங்களாக இருப்பதால், அவைகளில் ரெவின்யூ செலவினத்தின் கீழ் போடக்கூடிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள் கிறேன். ஒரு 'கிராப்பு'க்கு எவ்வளவு செலவாகிறது என்று பாருங்கள். டெல்டயிக் ஏரியாவும் இருக்கிறது, நான்-டெல்டயிக் ஏரியாவும் இருக்கிறது. அதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். பூராவும் கிணற்றுப் பாசனம் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு ஒரு போகம் நான்கு மாதம் நெல் பயிருக்கு 2 பாரல் டீஸல் எண்ணெய் வேண்டும். இரண்டு பாரல் எண்ணெய் என்ன விலை? ரூ. 160 விற்கிறது. இப்பொழுது காலனுக்கு இன்னொரு நான்குஅணா கூட. அப்படியானால் 84 காலனுக்கு என்ன ஆயிற்று என்று பாருங்கள். அது போக 'லியூப்ரிகேஷன் ஆயில்' தேவைப்படும், மேற் கொண்டு டிரைவர் சார்ஜ் இருக்கிறது. இப்படி நீர்ப்பாசனத்திற்கு ரூ. 200, ரூ. 220 ஆகிவிடுகிறது.

Sri N. ANNAMALAI PILLAI : எத்தனை ஏக்கருக்கு ?

* **Sri O. P. RAMASWAMI REDDIAR :** ஒரு ஏக்கருக்கு. இதைத் தவிர மின்சாரம் உபயோகித்தால் கரண்டு சார்ஜ். ஒரு ஏக்கர் நான்கு மாத சம்பாப் பயிருக்கு இந்த முறையிலே செலவு செய்ய வேண்டியிருக்கிறது. 'ஷார்ட் ட்யூரேஷன்' அதாவது, மூன்று மாதங்களாக இருந்தால், செலவு கொஞ்சம் குறையும். ஆகவே விவசாயச் செலவு என்ன ஆகிறது என்று பாருங்கள். டெல்டயிக் ஏரியாவில் ஒரு பக்கத்திலே கூலி ஜாஸ்தி, உரம் போடுவதில்லை. நான்-டெல்டயிக் ஏரியாவில் உரத்திற்கு அதிகம் செலவழிக்க வேண்டும். ஆனால் கூலியில் ஒன்றும் வித்தியாசம் இல்லை. இப்பொழுது தான் ராஜீயவாதிகள் விவசாயிகளைக் கிளப்பிவிட்டுவிடுகிறார்களே! யாரும் எந்த பார்ட்டியாகயிருந்தாலும் தூண்டுவதை விடுவதில்லை. இங்கே இருந் தாலும் அப்படித்தான், அங்கே இருந்தாலும் அப்படித்தான். ஒரு ஏக்க ருக்கு 10 முதல் 12 மூட்டை நெல் இல்லை என்றால் சாகுபடி நடக்காது. சாகுபடி செய்து அறுப்பு வரையிலும் நான் சொல்லுகிறேன். அதற்கு மேல் இறைப்பு நீர்ப்பாசனத்திற்கு ரூ. 200, ரூ. 220 ஆகிறது. சாகுபடிச் செலவு ரூ. 200. ஆறு மூட்டை புண்ணாக்கு வேண்டியிருக்கிறது. டெல்டயிக் ஏரியாவில் ஒரு விதத்தில் 'அட்வாண்டேஜ்' இருந்தால் வேறு விதத்தில் 'டிஸ்அட்வாண்டேஜ்' இருக்கிறது. அதேமாதிரித் தான் 'நான்-டெல்டயிக்' ஏரியாவிலும். நீர்ப்பாசனச் செலவையும் சேர்த்து இறைத்துப் பயிரிடுவதற்கு காணிக்கு, அதாவது 1-1/3 ஏக்கருக்கு, செலவு ரூ. 450-க்குக் குறையாது. அதற்கு மேல் வருவது தான் லாபம். அதிலே அவர்கள் என்னென்ன
5–30 p.m. வரி கொடுக்கிறார்கள் என்று கவனிப்போம். அதையும் கணக்கெடுத்தால் தெரியும். முன்னாலே நில வரி எவ்வளவு இருந்தது? இப்பொழுது எவ்வளவு? நமக்கு நன்றாகத் தெரியும். ஸர்சார்ஜ் பலவிதத்திலே

6th March 1958] [Sri O. P. Ramaswami Reddiar]

வசூலிக்கப்படுகிறது. **Betterment tax** ஒருபக்கம். அப்பொழுது ஸெஸ் காலணுவாக இருந்தது ; இப்பொழுது அது ஐந்து அணு. இரிகேஷன் ஸெஸ் முதலிய எல்லா ஸெஸ்களையும் உயர்த்திக் கொண்டிருப்பதைச் சொல்லு கிறேன். ஒரு பக்கம் வரி அதிகமாகிக்கொண்டேயிருக்கிறது. இன்னெரு பக்கம் கம்யூனிஸ்டு பார்ட்டியைப் பார்த்து பயம். நான் யாருக்கும் ' **plead** ' பண்ணுவதற்காகச் சொல்லவில்லை. இருக்கிற நிலைமையைச் சொல்லு கிறேன். உணவு உற்பத்தியை அதிகமாக்க வேண்டுமென்றால், ஜனங்களுக்கு அவசியமான உணவு கொடுக்க வேண்டுமென்றால், கம்யூனிஸ்டு கொள்கை களை நினைத்தபடி, நிலச் சீர்திருத்தம், வரி முதலியவைகளை ஜனநாயக அரசாங்கத்தில் செய்தால் சரிவர வேலை செய்யாமல் கெடுதல்தான் விளையும். இந்த ' ஸிஸ்டம் ஆப் கவர்ன்மெண்டு ' இருந்தால், கம்யூனிஸ்டு பார்ட்டி யாக இருந்தாலும் சரிவர நடத்த முடியாது. ' ரெஜிமெண்டேஷன் ' முறையில் தான் நடத்த முடியும். அதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். (ஒரு கனம் அங்கத்தினர் : கம்யூனிஸ்டு கையில் கொடுத்தால்.) நீங்கள் எல்லாம் ' பொலிடிகல் லீடர்ஸ் '. என்னைவிட உங்களுக்கு நன்ருகத் தெரியும். உங்களுக்கு ரொம்ப நாள் அனுபவம். உலகத்தில் என்ன நடக்கிறது என்பது நன்ருகத் தெரியும். நான் அதையெல்லாம் விவரித்துச் சொல்லுவதற்கில்லை. இங்கே கொஞ்சம் சூசமாகத்தான் சொல் லலாம். நானும் அரசாங்கத்தின் ஒரு ' பார்ட் அண்டு பார்ஸலாகத் ' தான் இருந்திருக்கிறேன். அப்பொழுதும் நான் இதைத்தான் சொல்லிக்கொண் டிருந்தேன். அவர்களுக்குத் தெரியும். இந்த முறையில் நாம் போய்க் கொண்டிருந்தால், உணவு உற்பத்தி பேப்பரில் தான் இருக்கும். இப்பொழுது ஜனங்கள் உற்பத்தி தான் அதிகமாக இருக்கிறது. அதிலும் கண்ட்ரோல் இல்லை. முன்பெல்லாம் பிரும்மசாரியம், கிரஹஸ்தா, வானப் பிரஸ்தா, சன்னியாசி என்றெல்லாம் இருந்தது. இருபது, இருபத்திரெண்டு வயதிற்குமேல் கலியாணம் இருக்கும், 50 வயதிற்குப் பிறகு வானப் பிரஸ்தம் ' பப்ளிக் ஸர்வீஸ் அண்டு கான்ஸண்ட்ரேஷன், ' பிற்பாடு ' ரினன்ஸியேஷன் ' (சந்நியாசம்) என்று இருந்தது. இப்பொழுதுதான் சாகும் வரையிலும் ஒவ்வொருவனும் கட்டிக்கொண்டு அழுகிருன். (சிரிப்பு) முன்பு மதத்தில் நம்பிக்கை இருந்தது. இப்பொழுது மதத்தில் நம்பிக்கை இல்லை. அப்பொழுது " பர்த் கண்ட்ரோல் " வேறு விதத்தில் இருந் தது ; இப்பொழுது மற்றொரு விதத்தில் இருக்கிறது. இப்பொழுது ' வைடாலிடி ' அழிந்துபோகிறது. குழந்தைகளைக் காப்பாற்றவேண்டுமே என்ற பயத்திலே இப்பொழுது ' பர்த் கண்டிரோல் ' நடக்கிறது. " கண்டி ரோல் ஆப் மைண்டு " வேண்டும். முன்னுளில் பொறி புலன்களை அடக்கி எந்த முறையில் வாழ்க்கையை நடத்தவேண்டும், பிறவி எதற்காக வந்தது, அதனுடைய " goal " என்ன என்பதையெல்லாம் தெரிந்து கொண்டு வாழ்க்கையை நடத்தினர்கள். இந்த நிலையிலே நாம் கீழே தான் போய்க்கொண்டிருக்கிறோம். " பர்த் கண்ட்ரோல் " இந்தியாவிலும் முடியாது, சைனுவிலும் முடியாது. நான் நன்ருகச் சொல்லுகிறேன். எங்கே " பாவர்டி " இருக்கிறதோ, எங்கே அதிக உணவு இல்லையோ, அங்கே தான் மனித உற்பத்தி ஜாஸ்தி, உணவு உற்பத்தி குறைவு. இது டாக்டர்களுக்குத் தெரியும். இதை நான் சொல்ல வேண்டியதில்லை. உணவு அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமானல், அதற்குத் தகுந்த சூழ்நிலையை அரசாங்கமும், மக்களும், மற்ற எல்லோரும் உண்டாக்க வேண்டும். அதுமாத்திரமல்ல. விவசாயிகள் 95 சத விகிதம் பேர்கள் இருக்கிருர்கள். அதில் எவ்வளவு " அன்இகனுமிக் ஹோல்டிங்ஸ் "? இந்தப் பொருளாதார நிலையிலே அவர்களில் எத்தனை பேர் இந்த நிலத்தை வைத்துக்கொண்டு அவர்களுடைய குடும்பத்தை நடத்த முடியும் ? 100-க்கு 5 பேர்கள் தான் ஏதோ உணவு உற்பத்தி செய்து அரசாங்கத் திற்கும் ஜனங்களுக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிருர்கள். அவர்கள் தர்மத்திற்குச் செய்யவில்லை. ஏதோ அதைத் தொழிலாக நடத்திக்கொண் டிருக்கிருர்கள். அவர்களுக்கு ' கபாஸிடி ' இருக்கிறது, பணம் இருக் கிறது, பழைய காலத்தில் வந்தது. அதை வைத்துக்கொண்டு கொடுக் கிருர்கள். எல்லோரும் வேலை செய்யாமல் திறமையும் குறைந்து கொண்டு வருகிறது. அப்படியிருக்கும்பொழுது விவசாயத்தை எந்த விதத்தில் அபிவிருத்தி செய்யலாம் என்பதைக் கவனிக்க வேண்டும்.

[Sri O. P. Ramaswami Reddiar] [6th March 1958

' விரோதத்தால் ' சொல்லவில்லே. உண்மையிலேயே எனக்கு விவசாயத்தி லும், கிராமத்திலும் கொஞ்சம் அனுபவம் இருக்கிறது. அரசாங்கத்திலும் கொஞ்சம் அனுபவம் இருக்கிறது. இந்த மூன்றையும் வைத்துக்கொண்டு என்னுடைய அனுபவத்தைச் சொல்லுகிறேன். ஏதாவது தகுதி இருந் தால் எடுத்துக்கொள்ளுங்கள். இல்லேயென்று விட்டுவிட்டால் அதன் பலனே நாம் எல்லோரும் அனுபவிப்போம்.

"அனிமல் ஹஸ்பண்டரி" (கால்நடை அபிவிருத்தி) விவசாயத்திலே ரொம்ப முக்கியமானது. டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் அதுபற்றிச் சொன்னுர்கள். அதிகமாக மாடுகளே உற்பத்தி செய்யாவிட்டால் நாடு அழிந்துவிடும். காரணம் டிராக்டர்களே வைத்துக்கொண்டு நாம் ஒன்றும் செய்ய முடியாது. அதுவும் நிலத்துக்கு ' ஹீலிங் ' கொண்டு வரவேண்டும் என்று சொல்லும்பொழுது, மாடுகளே வைத்துக்கொண்டு தான் ஏதாவது விவசாயம் செய்யலாம். மாடுகள் உழவுக்கும் பிரயோஜனப்படுகின்றன. இறைப்புக்கும் பிரயோஜனப் படுகின்றன. ' இன்ஆர்கானிக் ' மென்யூர் போட்டால் அதில் ' வைடமின் ' இல்லே. "ப்ரோடின்" இல்லே. இதைப்பற்றி நிபுணர்கள் சொல்லியிருக் கிறுர்கள். ' ஆர்கானிக் மென்யூர் ' $\frac{3}{4}$ பங்கும், ' இன்ஆர்கானிக் மென்யூர் ' $\frac{1}{4}$ பங்கும் போடவேண்டும். இல்லாவிட்டால் கிருமிகள் (' பாக்டீரியாக்கள் ') செத்துப்போய்விடும். நாக்குப்பூச்சிகள் வேலே செய்து செழிப்பு உண்டாக்கு கின்றன. கண்ணுக்குத் தெரியாமல் ஒரு அங்குலத்தில் கீழே 10 லட்சம், 20 லட்சம் பூச்சிகள் இருக்கும், அது லாபரட்ரியில் வேலே செய்து கொண்டிருப்பவர்களுக்குத் தெரியும். அவைகளெல்லாம் "இன்ஆர்கா னிக் மென்யூர்" போட்டால் செத்துவிடுகின்றன. 14 வருஷம் "இன் ஆர்கானிக் மென்யூர்" போட்டு அந்த நிலத்திலிருந்து உற்பத்தியாகும் தானியங்களேப் புறாக்களுக்குக் கொடுத்ததில் 100-க்கு 80 புறாக்கள் இறந்து விட்டன என்று பி. வி. நாத் அவர்களும், மகாரிஸன் அவர்களும் ரிப்போர்ட் டில் சொல்லியிருக்கிறுர்கள். அவைகளுக்கு 18 முதல் 25 சத விகிதம் "ஜெர்மி னேஷன் கபாஸிடி" இல்லே. 1916–18-ல் நடந்ததைச் சொல்லுகிறேன் அப்பொழுது அதை "பப்ளிஷ்" செய்தார்கள். திரும்பவும் அதை "பப்ளிஷ்" செய்யவில்லே. ஆகவே "இன்ஆர்கானிக்" உரத்தைக்கொண்டு நாம் அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்று நினைத்தால் அது தவறு. இதை 'ஹெல்த் டிபார்ட்மெண்டும்', விவசாய டிபார்ட்மெண்டும்' கவனித்துச் செய்யவேண்டும். ' அனிமல் ஹஸ்பண்டரி ' விஷயமாகச் சொல்லுகிறேன். பால் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும். பால் மனிதனுக்கு மிகவும் இன்றியமையாதது. தாயின் கர்பத்திலேயே பால் வேண்டியிருக்கிறது. ஆனுல் இந்தக் காலத்து நாகரிகத் தாய்மார் கள் பால் கொடுப்பதில்லே.

Sri P. T. RAJAN : இருந்தால்தானே கொடுப்பதற்கு ?

* Sri O. P. RAMASWAMI REDDIAR : இருந்தால்கூட அழகு கெட்டுப்போய்விடும் என்று கொடுப்பதில்லே. பசுக்களேக் காப்பாற்றி வளர்க்க வேண்டும். 'வாழ்க அந்தணர் ', 'வாழ்க பசுக்கள் ' என்று பாடிவிட்டால் போதாது. பசுக்களே அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளே எடுக்க வேண்டும். பசுக்களிலுள்ள ரகங்களே ' அப்க்ரேட் ' பண்ணவேண்டுமென்று மத்திய அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கமும் சொல்கின்றன. ஆனுல் இங்கே இருப்பவையோ ' ஸப்-க்ரேட் ' பசுக்கள் தான். சென்னே நகரத்தில் கன்றுகள் எல்லாம் அழிகின்றன. இதை அரசாங்கமும் கவனிப்பதில்லே, கார்ப்பொரேஷனும் கவனிப்பதில்லே. இதற்கு ஒரு திட்டம் கொண்டு வரலாம். பசுக்களேயும் கன்றுகளேயும் நன்ருக வளர்ப்பவர்களுக்கு மட்டுமே பால், அது சம்பந்தப்பட்ட பொருள்களே வியாபாரம் செய்வதற்கு லேஸென்ஸ் கொடுக்கலாம். ' மில்கிங் ஷெட்ஸ் ' அமைத்து, சானிடரி இன்ஸ்பெக்டர்கள் முன்னிலேயில் பால்காரர்கள் பால் கறப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். சென்னேயில் சாக்கடைக் கழிவு ஜலத்தில் நான்கு இடங்களிலாவது ஒவ்வொரு இடத்திலும் ஆயிரம் ஏக்கரில் fodder உற்பத்திக்கு ஏற்பாடு செய்யவேண்டும். நான் முதன் மந்திரியாக இருந்தபோது, இதற்கு ஏற்பாடு செய்யச் சொன் னேன். பத்து வருஷங்களில் 4,000 ஏக்கர்களே மட்டுமே இந்தத் திட்டத்தின்

6th March 1958] [Sri O. P. Ramaswami Reddiar]

கீழ் புல் வளர்க்கக் கொண்டுவரலாமென்று திட்டம். இந்தத் திட்டத்தை நன்றாக நிறைவேற்றினால், பசுக்களுக்கு நல்ல புல் உணவு கிடைப்பதற்கு வகை செய்தவர்களாவோம். மதுரையில் 200 எக்கர்களில் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருப்பதாகத் தெரிகிறது. இப்போது அவர்களுக்கு எக்கருக்கு ரூ. 1,250 நிகர வருமானம். இன்னும் பல எக்கர்களில் இதைக் கொண்டுவரலாம். அங்கே 100 எக்கர் பாயும் சர்க்கடை ஜலம் இப்போதும் வீணாக இருக்கிறது.

மேலும், கன்றுகளை மிகவும் நன்றாக வளர்ப்பவர்களுக்கு மத்திய அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கமும் பரிசுகள் வழங்க வேண்டும். மற்றவர்கள் புலால் உண்கிறார்கள் என்று சொல்லிவிட்டு, நாம் எல்லோரும் என்ன செய்கிறோம்? நாம் கன்றுகளைச் சாப்பிடுகிறோம். நாம் காலையில் குடிக்கும் காப்பி கன்று ஆகும். பால்காரர்கள் கன்றுகளின் நலனைக் கொஞ்சங் கூடக் கவனிக்காமல் பாலைப் பசுவிடமிருந்து ஏராளமாகக் கறக்கிறார்கள். கன்றுகள் இதனால் சாகின்றன. அதைத் தடுக்கச் சட்டம் செய்யவேண்டும். அரசாங்கத்தார் 'டெய்ரி பார்ம்ஸ்' அமைக்க வேண்டும்; பசுக்களின் தீவனத்திற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். பாசன வசதியுள்ள இடங்களில் தீவனப் பயிர்களை வளர்க்கலாம். அக்கறை எடுத்துக்கொள்பவர்களுக்கு அரசாங்கத்தார் சன்மானம் கொடுக்கலாம். இப்போது ஜில்லாக்களில் பால் அபிவிருத்தி கூட்டுறவு சொஸைடிகள் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் போதுமான அளவில் புல் உற்பத்தி செய்ய பிரயத்தினம் செய்யவில்லை.

விவசாயத்தை எடுத்துக்கொண்டால், ஜப்பானிய விவசாய முறை கையாளப்படுகிறது. விவசாய டிமான்ஸ்டிரேட்டர்கள் சரியாக வேலை செய்வதில்லை. ரோடு ஓரங்களிலுள்ள வயல்களில் மட்டும் விவசாயிகள் செய்ததைத் தாங்கள் செய்ததாக போர்டுகள் தொங்கவிட்டு அநேக இடங்களில் காட்டச் செய்கிறார்கள். மந்திரிகளும் அதிகாரிகளும் ரோடில் காரில் போகும்போது, அவர்களுக்கு அது தெரிய வேண்டுமென்பதற்காக அந்த இடங்களை மட்டும் அவர்கள் கவனித்திருக்கிறார்கள். இப்படி வேலை செய்பவர்களின் சம்பளத்தை அரசாங்கத்தார் இப்போது 30 ரூபாய் உயர்த்தியிருக்கிறார்கள். இப்போது ஒவ்வொரு பிர்க்காவிற்கும் ஒரு விவசாய டிமான்ஸ்டிரேட்டர் இருக்கிறார். இப்போது உத்தியோகத்திற்கு வரும் இளைஞர்கள் உண்மையாக உழைக்கும் மனப்பான்மை கொண்டவர்களாக இல்லை. 5.40 p.m

Sri K. BALASUBRAMANYA AYYAR: 'அரசாங்கத்தார் எங்களுக்கு ஏதாவது நிவாரணமளிக்கும்படி செய்யவேண்டும்' என்று அந்த உத்தியோகஸ்தர்கள் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

***Sri O. P. RAMASWAMI REDDIAR:** அவர்கள் நன்றாக வேலை செய்யும்படி செய்யவேண்டும். இல்லாவிட்டால், திட்டங்களுக்கு என்ன பணம் ஒதுக்கினாலும் பிரயோஜனம் ஏற்படாது. உத்தியோகஸ்தர்களுக்கு 'யூனிட் ஆப் வர்க்' நிர்ணயிக்க வேண்டும். 'செர்டிபிகேட் ஆப் மெரிட்' பேரில் அவர்களுக்கு 'இன்க்ரிமெண்ட்ஸ்' கொடுக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இருக்கிற வேலையில் 1/5 பங்கு வேலையைக் கூட இப்போது உத்தியோகஸ்தர்கள் செய்வதில்லை. இவர்களுடைய சம்பளங்களுக்கும் சர்க்காரின் திட்டங்களுக்கும் யார் பணம் கொடுக்கிறார்கள்? மக்கள் பணம் கொடுக்கிறார்கள். உபாத்தியாயர் தொகுதியைச் சேர்ந்த 5–6 அங்கத்தினர்கள் பேசினார்கள். அவர்கள் உபாத்தியாயர்களின் குறைகளைப்பற்றிப் பேசினார்கள். அவர்களுக்குச் சம்பள உயர்வு வேண்டுமென்றும் பேசினார்கள். இவர்களுடைய சம்பளங்களுக்காகவெல்லாம் வரிப் பணம் கொடுக்கும் ஏழை மக்களைப்பற்றி யார் பேசினார்கள்? விவசாயி எவ்வளவோ வரிப்பணம் கொடுக்கிறான். மக்கள் விழித்துக்கொண்டால், நாம் எல்லோரும் வீழ்ந்துவிடுவோம். தொண்ணூற்றைந்து சதவிகித மக்கள் வரிப் பணம் கொடுத்துக்கொண்டு, குறைந்த பட்சத் தேவைகள் கூடப் பூர்த்தி செய்யப்படாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நேரடி வரி

விதிப்பின்படியும், மறைமுக வரிவிதிப்பின்படியும் ஒவ்வொருவனும் இன்றைக்கு எவ்வளவு பணம் வரியாகக் கொடுக்கிருன் என்றும், ஒவ்வொருவனுக்கும் வரிப் பணம் போக மீதி எவ்வளவு பணம் கிடைக்கிறது என்றும் கணக்குப் போட்டிருக்கிறேன். அந்தக் கணக்கு என்னிடம் இருக்கிறது. இப்போது என்.ஜீ.ஓக்களின் பிள்ளைகளுக்கு இலவசக் கல்விச் சலுகையை அரசாங்கத்தார் அளித்திருக்கிருர்கள். ஏராளமாக வரிப் பணம் கொடுக்கும் ஏழை மக்களின் பிள்ளைகளுக்கு அரசாங்கத்தார் என்ன செய்தார்கள்? சமூகத்தில் பெரும்பான்மை ஏழைப் பிரிவினரை புறக்கணித்துவிட்டு மற்ருெரு பிரிவினரையே கவனித்துக்கொண்டிருக்கக்கூடாது. மத்திய அரசாங்கத்தார் தங்கள் ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தினுர்கள். அதைப் பார்த்த ராஜ்ய அரசாங்க ஊழியர்கள் தங்கள் சம்பளத்தையும் உயர்த்தவேண்டுமென்று கிளர்ச்சி செய்தார்கள். மத்திய அரசாங்கத்தார் தங்கள் இஷ்டம்போல் தங்கள் ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்திவிடுகிருர்கள். நம்மைக் கலந்தாலோசிக்காமல் அவர்கள் அவ்வாறு எப்படிச் செய்யலாம் என்று நான் கேட்க விரும்புகிறேன். இதை நாம் கண்டிக்க வேண்டும். ஒரே ஊரில் இரு அரசாங்கங்களின் ஊழியர்களும் வேலை பார்க்கிருர்கள். ஒருவன் 20 ரூபாய் சம்பளம் வாங்கும்போது பக்கத்திலிருப்பவன் அதே வேலைக்கு 40 ரூபாய் சம்பளம் வாங்குகிறன். இதையெல்லாம் குறித்து யாராவது ' ரிட் பெடிஷன் ' போட்டால், அரசியல் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டியிருக்கும். இம்மாதிரி இதுவரையில் ஐந்து அல்லது ஆறு தடவைகள் மாற்றியமைக்கப்பட்டது.

Dr. A. SREENIVASAN : அரசியல் சட்டத்தை மாற்றியமைத்தால் போச்சு.

(Mr. Chairman in the Chair.)

* Sri O. P. RAMASWAMI REDDIAR : இது ' டிஸ்கிரிமினேஷன் '. அதைச் செய்யக்கூடாது. இவ்வளவு வரி கொடுத்தும், திரும்பவும் விவசாய வருமான வரிக்கு எந்த விதத்தில் ' ஜஸ்டிபிகேஷன் ' இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. நான் கூட முன்பு அரசாங்கத்தில் இருக்கும்பொழுது நினைத்தேன். ' பேஸிக் ' வரியைக் குறைத்து அதற்கு மேலே விவசாய வருமான வரி போடவேண்டுமென்று நினைத்தேன். ' லாண்டு ரெவின்யூவைக் ' Codify செய்து ' கன்ஸாலிடேட் ' பண்ண வேண்டுமென்று நினைத்தேன். அப்பொழுது அவகாசம் இல்லை. இப்பொழுது இருக்கிற அமைச்சர் இதைக் கவனிப்பார் என்று நினைக்கிறேன். இப்பொழுது நிலத்திற்கு ' ஸீலிங் ' ஒரு பக்கம், மறு பக்கத்தில் விவசாய வருமான வரி, இன்னொரு பக்கத்தில் டீசல் எண்ணெய்க்கு அதிக வரி, கரண்டுக்கு ஸர்சார்ஜ், ' மினிமம் சார்ஜ் ' இவைகளையெல்லாம் வைத்துக் கொண்டு உற்பத்தியை எப்படி அதிகமாக்க முடியும் ? ' காஸ்ட் ஆப் கல்டிவேஷன் ' எவ்வளவு ? எல்லாம் அவர்கள் தலையில் தான் வந்து விழுகிறது. காரணம் அவர்களிடம் கண்ட்ரோல் இல்லை. எல்லோரும் ஒற்றுமையாக இருந்துகொண்டு, செய்யமாட்டேன் என்று சொன்னுல் அப்பொழுது தெரியும். அவர்கள் பரந்து இருப்பதால், அவர்களை ஏமாற்ற முடிகிறது. உணவு உற்பத்தி அதிகரிக்க வேண்டுமானுல், இவைகளையெல்லாம் யோசித்துத் தகுந்தபடி எல்லாவற்றையும் செய்யவேண்டும். இம்மாதிரி உபத்திரவத்தில் இருந்துகொண்டு, எப்படி உற்பத்தியை அதிகரிக்க முடியும் ? மத்திய அரசாங்கமும் கூட கொடுத்த அரிசியை நிறுத்திவிட்டது. ராஜ்ய அரசாங்கம் சரியாக எழுதிச் சண்டை பிடித்திருக்கவேண்டும். ரெவின்யூ இலாகா கொடுத்த தவருன புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு தான் இப்படி ஆகிவிட்டது என்று நினைக்கிறேன். அவர்கள் புள்ளி விவரங்களைச் சரியாகக் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. நான் அரசாங்கத்தில் இல்லாததால், எனக்கு அவ்வளவாக ' பெஸிலிடீஸ் ' இல்லை. இருந்தாலும் எனக்குள்ள ' பெஸிலிடீஸை ' வைத்துக்கொண்டு நான் சொல்லுகிறேன். அந்தப் புள்ளி விவரம் தவருனது என்று நான் சொல்லுகிறேன். எல்லோரும் நல்ல முறையிலே வாழ ஏற்பாடு செய்ய வேண்டும். நான் அதிக நேரம் பேசிவிட்டேன் என்று நினைக்கிறேன். (ஒரு கனம் அங்கத்தினர் : இன்னும் 10 நிமிஷங்கள் இருக்கின்றன.)

6th March 1958]

Sri K. BALASUBRAMANYA AYYAR : நீங்களும் அரசாங்கத்திற்கு வந்துவிடலாமே ?

* Sri O. P. RAMASWAMI REDDIAR : அது வேறு விஷயம். இந்த 'பட்ஜட்டிலே' 'சோஷல் சர்விஸ்', 'விமன் வெல்பேர்' என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. அதற்கெல்லாம் என்ன 'அல்லாட்மெண்டு', எவ்வளவு 'ப்ரொவிஷன்' என்பது தெரியவில்லை. கதரை எடுத்துக் கொண்டால், பூஜ்யம் வைத்திருக்கிறது. 'டாட்ஸ்' வைக்கப்பட்டிருக்கின்றன. அநேக விஷயங்களில் சரிவர விவரங்கள் தரப்படவில்லை. அது வேறு டிபார்ட்மெண்டாக நடந்தாலும் கூட அதன் விவரங்களை எடுத்து என் இங்கே போட வில்லை ? தெரிய வேண்டாமா ? கதருக்கு ரூ. லக்ஷம் செலவு என்று சொல்லப்படுகிறது. அது பற்றி இங்கே ஒன்றும் இல்லை. இரண்டாவது ஐந்து வருடத் திட்டத்தில் "டாட்ஸ்" போடப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் எவ்வளவு 'அல்லாட்மெண்டு', 'ப்ரொகிரஸ்' எவ்வளவு ஆயிற்று என்ற விவரங்கள் கொடுக்கப்படவேண்டும். பிளாக் டெவலப்மெண்டு என்று அதற்காக அநேக உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வேலை செய்யமுடியவில்லை. அவர்கள் அதிகமாக ஒன்றும் வேலை செய்வதில்லை. முன்பு ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு ஜில்லா போர்டு இருந்தது. இப்பொழுது ஒவ்வொரு பிர்காவுக்கும் ஒரு போர்டு ஏற்படப் போகிறது. இந்த முறையில் ஊழியர் செலவு அதிகம் நடந்துகொண்டு வருகிறது. 'சோஷல் எஜுகேஷன் ஆபீஸர்' என்று 10, 15 பேர்களைப் போட்டிருக்கிறார்கள். இப்பொழுது இரண்டு செக்ஷனாக வேலை செய்கிறது. ராஜ்ய அரசாங்கம் ஒரு செக்ஷன், மத்திய அரசாங்கம் ஒரு செக்ஷன். ஒவ்வொருவரும் 3, 4 உத்தியோகஸ்தர்கள் போடுகிறார்கள். கதர், கிராமத் தொழில்கள், அம்பர் சர்க்கா என்றெல்லாம் பலவித டிபார்ட்மெண்டுகள் இருக்கின்றன. ஆனால் அதையெல்லாம் ஒன்று சேர்த்துச் சரியாக வேலை செய்வதில்லை.

Dr. A. SREENIVASAN : சம்பளம் கிடைக்கிறது.

* Sri O. P. RAMASWAMI REDDIAR : ஏதோ நடக்கிறது. இதற்கு நான் யாரையும் குறை கூறவில்லை. ஆனால் 'கன்ஸ்டிரக்டிவாகச்' சொல்லு கிறேன். எல்லாம் 'அன்வீல்டியாக' இருக்கிறது. யாரையும் குற்றம் சொல்லிப் பயன் இல்லை. குற்றம் 'பார்டியிடம்' இருக்கிறது, ஜனங்களிடம் இருக்கிறது, அரசாங்கத்தினிடம் இருக்கிறது, அரசாங்க ஊழியர்களிடம் இருக்கிறது, எல்லோரிடத்திலும் இருக்கிறது. பொது ஜனங்கள் ஒன்றிலும் அக்கறை எடுத்துக்கொள்ளுவதில்லை. எல்லோருக்கும் சுயநலம் (selfishness) தான் மேலோங்கி இருக்கிறது. இம்முறையில் நடப்பதா 'ப்ரொகிரஸிவ்' நேஷன் ? இம்மாதிரி நடந்தால் எப்படி ப்ரொகிரஸாகும் ? உலகத்திலே எல்லோரும் மேலே சென்றுகொண்டிருக்கிறார்கள். நாம் கீழே போய்க்கொண்டிருக்கிறோம். மற்றவர்கள் 'ஸ்பட்னிக்' என்றெல்லாம் பறக்கவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாம் அவர்களைப்போல் 5 மடங்கு வேலை செய்தால்தான் அவர்களுக்குச் சமமாக முன்னேற முடியும். நாம் இப்பொழுது 5 மடங்கு கீழே இருக்கிறோம். விவசாயத்திலிருந்து அரசாங்க ஊழியர் வரையிலும் இப்படித்தான் இருக்கிறது. மத்திய அரசாங்கத்தில் கோடிக் கணக்கில் செலவு நடந்துகொண்டிருக்கிறது. மைனர் கையில் அகப்பட்ட பணம் மாதிரி தான். வருடாவருடம் குறைந்தது 10 முதல் 20 கோடி ரூபாய் வீணடிக்கப்படுகிறது. இவர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். ஏதோ அரசாங்கத்திற்குச் செய்யக் கூடாது என்ற எண்ணமில்லை. ஆனால் அரசாங்க ஊழியர்களும் அதிகமாக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் பிரயோஜனம் இல்லை. அரசாங்க ஊழியர்களுக்கு ' ஏழைகளுடைய பணத்தைத் தானே நாம் பெறுகிறோம், ஆகையால் அவர்களுக்கு நன்மை செய்யக் கடமைப்பட்டிருக் கிறோம்' என்ற எண்ணம் வரவேண்டும். இந்த நிலைமையில் போய்க் கொண்டிருந்தால், காந்தி அடிகள் வந்தால் கூட ஒன்றும் செய்ய முடியாது. 5-50 p.m.

Dr. A. SREENIVASAN : அதனால்தான் அவர் போய்விட்டார்.

[6th March 1958

* Sri O. P. RAMASWAMI REDDIAR : திறமையின்மை அதிகமாகப் போய்விட்டது. இம்மாதிரி இருந்தால் நாடு முன்னேற்றம் அடைய முடியாது. தொழில்கள் 'த்ரைவ்' ஆகவில்லை. தொழிற்சாலைகள் பரந்த முறையில் கிராமங்களில் அமைக்கப்படவேண்டும். எல்லாம் ஒரே இடத்தில் நகரங்களில் குவியக்கூடாது. நகரங்களெல்லாம் அதிகமாக நரகங்களாக ஆகக்கூடாது. அப்படி இருந்தால், ஒருவிதமான முன்னேற்றமும் ஏற்படாது. வசதியில்லாத இடத்தில் தொழிற்சாலைகள் ஏற்பட்டால் அங்கே பால், சாணி, எரு, முட்டை, கறிகாய் என்று பல பேர்களுக்குப் பிழைக்க வழி ஏற்படும். படிக்காதவர்கள் அதிகமாக வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி இந்த சபையிலும் சரி, அந்த சபையிலும் சரி, யாரும் பேசுவது கிடையாது. இதையெல்லாம் நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். நாட்டிற்கு நன்மை செய்வதற்காக நாம் சட்ட சபைக்கு வந்திருக்கிறோம். நமக்கு சௌகரியம் செய்துகொள்ளுவதற்காக வரவில்லை. நமக்கு அதிகமாக லைசென்ஸ் கிடைக்கும் என்பதற்கு மட்டும் நாம் இங்கு வரவில்லை. மற்றவர்களுக்கு நன்மை செய்வதற்காகத் தான் நாம் எல்லோரும் இங்கு வந்திருக்கிறோம் என்பதை நினைத்துத் தகுந்த முறையிலே பாரபட்சம் இல்லாமல் காரியங்களைச் செய்யவேண்டும். எங்கே அதிகத் தொந்தரவு இருக்கிறது, எங்கே ஏழ்மை இருக்கிறது, எங்கே அறியாமை இருக்கிறது, எங்கே செல்வம் குவிந்திருக்கிறது, எங்கே வேண்டியது கூட இல்லாமல் இருக்கிறது, எந்த இடத்தில் அதிகமாகச் சேவை செய்ய வேண்டும் என்பதையெல்லாம் நாம் ஆராய்ந்து பார்த்துத் தொண்டு செய்ய வேண்டும். விவசாயம், கோசம்ரக்ஷணை, கைத்தொழில், கிராமபுனருத்தாரணம், கதர், முதலிய துறைகளில் அதிகமாகக் கவனத்தைச் செலுத்த வேண்டும். நமது அமைச்சர்கள் ஏதோ கொஞ்சம் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். எல்லா இடத்திலும் அவர்களே நேரில் பார்க்க முடியாது. அதற்கான திட்டத்தை வகுத்துக்கொடுத்திருக்கிறார்கள். அங்கங்கே இருப்பவர்கள் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நாடு முற்போக்கில் போகாமல், பிற்போக்கில் தான் போய்க் கொண்டிருக்கும். நம்முடைய திட்டங்களுக்காக 4,000 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம், ஆனால் நமக்குப் பலன் கிடைத்திருப்பது ரூ. 280 கோடி தான் இருக்கும் என்று நினைக்கிறேன். மற்றத் தொகை வீணாகத் தான் செலவு செய்யப்பட்டிருக்கும். உலகத்திலிருக்கும் நிலைமை இப்பொழுது அப்படி இருக்கிறது. எங்கே பார்த்தாலும் அப்படித்தான் இருக்கிறது. எல்லாம் வல்ல இறைவன் நமக்கு அருள் புரிந்து உள்ளே இருந்து தூண்டி நாமும் நன்றாக நடந்துகொண்டு, தகுந்த முறையிலே அறியாமை, ஏழ்மை இவைகளைப் போக்கி உணவு உற்பத்தியை அதிகரித்து சுபிட்சமாக வாழவேண்டும் என்று பிரார்த்தித்துக்கொள்ளுகிறேன். நம் அமைச்சர்கள் ஏதோ செய்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் அதிகமாகச் செய்யலாம் என்பதற்குத்தான் சொன்னேன். அவர்கள் எப்பொழுதும் சுற்றுப்பிரயாணத்தில் இருந்தால் போதாது. உத்தரவுகள் என்ன ஆயிற்று என்பதையும் கொஞ்சம் இங்கிருந்து கவனிக்க வேண்டும். அவர்களுக்கு இருக்கும் தொந்தரவு, உபத்திரவம் எனக்குத் தெரியும். 'அவன் கூப்பிட்டால் போனீர்களே, நான் கூப்பிட்டால் மட்டும் வரக்கூடாதா' என்று பார்ட்டிக்காரர்கள் தொந்தரவு செய்வது எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் அவர்கள் 10 நாட்களாவது இங்கிருந்து உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டனவா, 'எபிஷியன்ஸி' இருக்கிறதா என்று பார்த்து சேவை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* Dr. A. SREENIVASAN : Mr. Chairman, Sir, it looks as though the States of the Indian Union have been reduced to the level of local bodies. We are not at all autonomous in any of our activities though we want to become free in every way. Take, for instance, taxation. It looks as though the Centre is the taxing authority. Some doles are being given to us from time to time, and we depend on the doles practically for everything. Instead of

6th March 1958] [Dr. A. Sreenivasan]

the sales tax, they want to introduce an excise duty on sugar, tobacco and the like and we may get about three crores of rupees. Other items also are likely to be in their list and we may get a little more. What is it that we lose in its place? We lose our incentive. We begin to play a subordinate role in the administration of our own affairs. It looks as though the local Government are in the position of a modern landowner who collects a little rent out of the doles given to him by his tenant. That is the position.

Sir, coming to capital expenditure, for power development and irrigation we have totally to depend on the whims and fancies of the Planning Commission and the Central Government. This type of centralisation will be disastrous in course of time. It will recoil on our own heads unless we set our house in order. I put forward a very strong plea for decentralisation of power. The Centre has practically become a unitary form of Government in the fullest sense of the term. This cannot go on for long. It may go on well so long as the present Prime Minister is there due to his personality and other things. Cracks have taken place in the Indian Union, viz., in the Kerala State. The crack is likely to extend to Tamil Nad in the near future.

Sri P. T. Rajan: God forbid . . .

